பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 06 ஞாயிற்றுக்கிழமை 19.05.2024 கதிர் 193

# முன்னெப்போதும் இல்லாதவாறு தமிழ் இனத்தின் மீது அச்சுறுத்தல்

## எதிர்த்துப் போராடவேண்டியது வரலாற்றுக் கட்டாயம் என்கிறது முள்ளிவாய்க்கால் 2024 பிரகடனம்

முன்னெப்பொழுதும்இல்லாத வாறு தமிழினம் தனது இருப் பின் மீதான அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது. தமிழி னத்தின் இருப்பை சவாலுக் குட்படுத்தும் அலகுகளை எதிர்த்து போராடவேண்டிய வரலாற்றுக்கட்டாயத்துக்குள் தமிழினம்வலிந்துநிர்ப்பந்திக் கப்பட்டுள்ளது. ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர், தேர்தல் பகிஷ்கரிப்பு, ரணிலுக்கே ஆதரவு, யார் போட்டியாளர்கள் என்று தெளிவாகத் தெரிந்த பின்னர் யாருக்கு ஆதரவு என்பதைத் தீர்மானிக்கலாம் என்று பல தெரிவுகள் தமிழர்கள் மத்தியில் அடிபடுகின்றன.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள், குறிப்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவுக்கு ஆதரவான கொள்கை முடிவில் இருப்பதாகத் தெரிவிக்கின்றது. ஆனால் அதற்குள் இருக்கும் புளொட் இந்த முடிவுடன் உளப்பூர்வமாக ஒத்துப்போகவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. கொழும்பில் இருந்து என்னுடன் பேசிய மூத்த தமிழ் அரசியல்வாதி ஒருவர், தான் புளொட் தலைவருடன் பேசியபோது, பொது வேட்பாளர் என்கிற விடயத்திற்குத் தானும் எதிர்தான் என்றபோது எல்லோரும் ஒற்றுமையாக நிற்பது என்பதற்காகத்தான் அந்த நிலைப்பாட்டோடு ☞2

## யாழ். பல்கலையிலும் நேற்று நினைவேந்தல்



யாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்திலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்ஏற்பாட்டில்இந்தநினைவேந்தல் நிகழ்வானது யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்தூபியில்நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுடர் ☞2

## கொழும்பிலும் நேற்று அஞ்சலி

போரில் கொல்லப் பட்டவர்கள் சார்பாக கொழும்பிலும் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் இந்த நிகழ்வுகொழும்பில்நடை பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கு எதிராக ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியின்போது முதல் தடவையாக கொழும்பு காலிமுகத்திடலில்முதல் முறையாகமுள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு ☞2

## தமிழ் இனப் படுகொலையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்து

### வடக்கு கிழக்கு சிவில் சமூகங்கள் தெரிவித்தன



தமிழர்களின் கூட்டுத் துன்பங்களும் பெரும் படுகொலைகளும் இனப்படுகொலையாக சர்வதேச சமூகத்தினாலோ அல்லது தொடர்ந்து வந்த இலங்கை ஆட்சியாளர்களினாலோ இன்னும் அங்கீகரிக்கப் படவில்லை. எனவே, தமிழ் இனப்படுகொலையை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தையும் இலங்கை ஆளும் தரப்பையும் வடக்கு கிழக்குமாகாணதமிழ்சிவில் சமூகம் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ☞9

## கண்ணீர்க் கதறல்களுடன் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

### உணர்ச்சிக் கொந்தளிப்பானது நினைவு முற்றம்




கண்ணிர்க் கதறல்களுடன் முள்ளிவாய்க்காலில் நேற்று உணர்வெழுச்சி பெற்றது தமிழ் இனப்படுகொலையின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல்.

தமிழ் இனப் படுகொலை முள்ளிவாய்க்கால் உச்சம் பெற்று, தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக்கொன்றொழிக்கப்பட்டு, தமிழினப்படுகொலைஇடம்பெற்று நேற்றுடன்பதினைந்து ☞8

## நல்லூரில் திலீபன் தூபி முன்பாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

### ஆவணக் காட்சியகத்தில் இடம்பெற்றது



தமிழினப் படுகொலையின்வரலாறுகளை ஆவணக்காட்சிப்படுத்தி நல்லூரில்தியாகிதிலீபன் தூபிக்கு முன்பாக அமைக்கப்பட்ட நினைவிடத்திலும்நேற்றுமுள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெற்றது.

அடுத்த ☞8

## கிழக்கு பல்கலையில் நேற்று நினைவேந்தலுக்கு இடையூறு

### பொலிஸார் விளைவித்தனர்; அம்பிகா கண்டனம்

கிழக்கு பல்கலைக் கழகத்தில் மாணவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால்நினைவேந்தலுக்கு நிகழ்வு பொலிஸாரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டுக்குழப்பப்பட்டது. மாணவர்கள் முள்ளிவாய்க்கால்கஞ்சிவழங்குவதற்கும் அவர்களை தடையேற் படுத்தினர்.

தமிழினப்படுகொலை வாரத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்றுவடக்கு, கிழக்கில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக கிழக்கு பல்கலைக்கழகத்தில் நேற்றுமுள்ளிவாய்க்கால் நினைவேந்தல்ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக வாயிலில் தற்காலிக ஏற்பாடுகளின் கீழ் இந்த நினைவேந்தலை மாணவர்கள்சிலர் ☞2

## முள்ளிவாய்க்கால் கடற்கரையில் நேற்று இறந்தோருக்கு பிதிர்கடன்



போரின்போது முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டமக்களுக்கு ஆத்மசாந்தி வேண்டி முள்ளிவாய்க்கால் கடற்கரையில் பிதிர்க்கடன் நிறைவேற்றப்பட்டது. தமது உறவுகளைப் பறிகொடுத்த பலரும் இங்கு வந்து பிதிர்க்கடன் ☞8

## போர் முடிந்து 15 வருடங்களாகியும் தமிழ் மக்கள் நீதிக்காக காத்திருப்பு

### மன்னிப்புச் சபையின் செயலாளர் தெரிவிப்பு; முழந்தாளிட்டு மலர் தூவி அங்கு அவர் அஞ்சலி



இலங்கையில் போர் முடிவடைந்து 15 வருடங்கள் கழிந்தும் பாதிக்கப்பட்டதமிழ்மக்கள் நீதிக்காக தற்போதும் முள்ளிவாய்க்காலில் காத்திருக்கின்றனர் என சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் செயலாளர் நாயகம் அக்னஸ் கலாமார்ட் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டார் ☞8

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வலியது ‘ஹாஸ்டக் ஜெனரேசன்’ அறிக்கை

தமிழர்களைநினைவு கூருவதில் அரசின் கட்டுப்பாடுகளும்அடக்கு முறைகளும்பிரயோகிக் கப்படும்போதும் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரித்துபகிர்ந்தளித்தல் நினைவேந்துதலின் வலிமையான செயற்பாடாகும்-எனஹாஸ்டக் ஜெனரேசன் தெரிவித்துள்ளது

இதுதொடர்பில்வெளியிட்டுள்ள அறிக்கையில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை வாழ் தமிழர்களின் கூட்டு நினைவுகளில் முள்ளிவாய்க்கால்கஞ்சிமுக்கிய பங்குவகிக்கிறது. இது இலங்கையின் இறுதி யுத்தத்தில் தமிழர்கள் அனுபவித்த ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சேர்ந்து நிற்கின்றேன் என்று தெரிவித்திருந்ததார் எனக் குறிப்பிட்டார்.

ரெலோ தலைவரும் தனது உரையில் பொது வேட்பாளர் பற்றி ஆராய்ந்து வருகின்றோம் என்கிறார். அதாவது இன்னும் முடிவுஎடுக்கவில்லை. இந்தக் கூட்டணிக்குள் சுரேஸ் பிரேமச்சந்திரன் மட்டும்தான் தமிழ்ப் பொது வேட்பாளரைத் தீவிரமாக ஆதரித்து நிற்கின்றார்.

இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சியின் மத்தியசெயற்குழு இன்று கூடி என்ன முடிவு எடுக்கவுள்ளது என்று இவர்கள் எல்லோரும் காத்திருக்கின்றார்கள். தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தன் இந்த முடிவை கட்சி முழுமையாக எதிர்க்கவேண்டும் என்று ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார். தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரன் ஆகிய இருவருக்குமே அவர் இது தொடர்பில் இறுக்கமான அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கிறார்என்றுசெய்திகள் வருகின்றன. அதன்பின்னர்அவர்கள் இருவரும்பொது வெளிகளில் பொது வேட்பாளரை ஆதரித்துக் கருத்துக்கள் எதுவும் சொல்லவில்லை என்பதும் கவனத்துக்குரியது.

தமிழ் அரசுக் கட்சி பொது வேட்பாளரை நிராகரித்து ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தால், மதில்மேல் பூனையாக நிற்கும் மற்றைய கட்சிகளுக்கு அது வாய்ப்பாகிவிடும். தமிழ் அரசுக் கட்சியின்மீதுபழியைப்போட்டுவிட்டு அவை தமது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளும்.

இந்தப் பிச்சல் பிடுங்கல்களுக்கு மத்தியில் கொழும்பில் தமிழர்களின் முக்கிய அரசியல் தரப்புக்களுடன்முக்கியமானமூன்றுவேட்பாளர்களும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றார்கள் என்று தெரிகின்றது. இவை உத்தியோகபூர்வமான பேச்சுக்களாக இல்லை என்கிறபோதும் மூவருமே தமிழர்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் தீவிரம் காட்டிவருகின்றார்கள். அதில் ரணில் விக்கிரமசிங்க வழக்கம் போலவே நான் அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று கதைவிட்டு வருகின்றார் என்று அறிய முடிந்தது. தீர்வுக்கு முன்னதாக 13ஐ நடைமுறைப்படுத்துவேன் என்றும் ஆனால், பொலிஸ் அதிகாரம் இன்றித்தான் அதை நடைமுறைப்படுத்துவேன் என்றும் கூறியிருக்கிறாராம். மறுபுறுத்தில் சஜித் பிரேமதாஸ தான் பகிரங்கமாக அறிவித்தது போன்றே 13ஐ மு-முமையாக நடை-முறைப்படுத்துவேன் என்று தெரிவித்திருக்கிறாராம். அதாவது காணி,பொலிஸ்அதிகாரங்கள்உட்பட அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்துவேன், அதனால்தான் அதைப் பகிரங்கமாகவும் அறிவித்திருக்கின்றேன் என்று கூறியிருக்கிறராம். அதுதான் தமிழர்களுக்கு அவர் முன்வைக்கும் நிரந்தரத் தீர்வா என்று கேட்கப்பட்டதற்கு, இல்லை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் கூறியவற்றை நிறைவேற்றுவேன், அது தொடர்பாக இந்த ஜனாதிபதித் தேர்தல்அறிக்கையிலும்தெளிவாகக் குறிப்பிடப்படும் பாருங்கள் என்றாராம்.

ஜேவிபி தரப்பில் தமிழர்களுக்குச் சரியானதொரு தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது என்ன தீர்வு என்று சொல்லப்படவில்லை. அதேநேரம், 13ஐ ஒரு தீர்வாகத் தாங்கள் ஏற்கவில்லை என்றும் தமிழர்கள் விரும்பினால்அதன்மீதுதாங்கள்கைவைக்க மாட்டோம் என்றும்கூட அவர்கள் கூறியிருக்கின்றனராம்.

இவையெல்லாம் இந்தத் தரப்புக்களால்உத்தியோகபூர்வமாக பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட நிலைப்பாடுகள்அல்ல. தமிழர்களின் ஆதரவைப் பெறவேண்டும் என்பதால் தொடக்க நிலைக் கலந்துரையாடல்களில் பேசப்பட்ட விடயங்களாக இருக்கின்றன. இனி போகப் போக ஜனாதிபதித் தேர்தல் நிலைகள்எப்படிமுன்னேறுகின்றன என்பதைப் பொறுத்தும் தெற்கின் அரசியல் நிலைப்பாடுகள், சிங்கள மக்களின் சிந்தனையோட்டம் எப்படி மாறுகின்றது- என்பதைப் பொறுத்தும்இந்தவிடயங்கள்மேலும் மாற்றங்களுக்கு உள்ளாகும் என்று எதிர்பார்க்கலாம். பௌத்த சிங்கள வாக்களைக் கவரவேண்டுமானால் தமிழர்களுடனான உடன்படிக்கைகளுக்குப்போகவேகூடாதுஎன்று கருதினால், இப்போது சாதகமாகப் பேசக்கூடிய வேட்பாளர்கள்கூட தீவிர சிங்களத் தேசியவாதம் பேசிக் கொண்டுஅந்தப்பக்கம்சாய்வதற்கும் தயாராக இருப்பார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. எனவேதான் இந்தத் தருணத்தில் வெறும் கலந்துரையாடல்களாகமட்டும்இந்த அரசியல் நகர்வுகள் முன்னகர்த்தப்படுகின்றன.

தேர்தல் நெருங்க நெருங்கவே உண்மை நிலவரமும் வேட்பாளர்களின் உண்மைநிலைப்பாடுகளும் தெரியவரும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முன்னெப்போதும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் ஒருதேச அங்கீகாரத்துக்குரியவர்கள் என்பதோடு அவர்களின் தனித்துவமான இறையாண்மையினதும்ஒருபோதும் பராதீனப்படுத்தஇயலாதசுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் சுயாட்சியைஅங்கீகரிக்கவேண்டும்.

இவ்வாறு முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்பொதுக்கட்டமைப்பு (வடக்கு,-கிழக்கு) ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின்போது இந்தப்பிரகடனம்வெளியிடப்பட்டது.

ஆதீன முதற்குரு தவத்திரு அகத்தியர் அடிகளாரால் வாசிக்கப்பட்டஇந்தப்பிரகடனத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழினப் படுகொலை முள்ளிவாய்க்காலில்உச்சந்தொட்டு இன்றுடன் 15 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

ஒவ்வொரு படுகொலைக்குப் பின்னரும் 'இனிமேல் இது நடக்கவே கூடாது' என்ற உணர்வுப் பிரவாகம் வலுவாக எழுந்தாலும், அதுவே தொடர்கின்றது.

இனிமேல் நடக்கவே கூடாது என்ற உணர்வுப் பிரவாகம் அர்த்தமற்றதாகிவிட்டது. ஈழத்தமிழினப் படுகொலை ஒரு வரலாற்று செயன்முறையாக காலணித்துவத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

தமிழினப்படுகொலையின் வழிவரைபடம்பேரரசுக்கட்டமைப்பின் புவிசார் அரசியல் நலன்களைத் தவிர்த்து உருவாக்கப்படவில்லை என்பதுஐயமுறதெரிகின்றது. புவிசார் அரசியல் நலன்களின் பிராந்திய தளங்களில் ஏகாதிபத்தியத்தை தக்கவைப்பதற்காக பேரரசுக் கட்டமைப்பைதுணைக்குத்தகைக்கு விட்டுள்ளது.

அதனுடைய ஒரு வடிவமாகத்தான் இஸ்ரேலையும் இலங்கையையும் அவதானிக்க வேண்டும். தமிழினப்படுகொலை நடந்து15ஆவதுஆண்டில்பலஸ்தீனப் படுகொலை அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பலஸ்தீனப் படுகொலையை உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கு தமிழினப் படுகொலைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பலஸ்தீனப் படுகொலைக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமைப் பண்புகள் இருப்பதை அவதானிக்கலாம்.

ஆசியாவில் இலங்கைத் தீவினதும், குறிப்பாக திருகோணமலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவமும் மத்திய கிழக்கில் பலஸ்தீனத்தின் கேந்திர முக்கியத்துவமும்புவிசார்அரசியலில் கோலோச்சுவதற்கு பேரரசுக்கு மிக அவசியமானது.

பேரரசைக் கட்டமைப்பதற்கு அதன் நலன் சார்ந்த எந்த விலையையும் கொடுப்பதற்கு பேரரசு தயாராக இருப்பதை இவை கோடிட்டுக் காட்டுகின்றன.

பேரரசும்அதன்வலையமைப்பும் உற்பத்தி செய்கின்ற இராணுவத் தளபாடங்களுக்கும் பேரரசின் பொருளாதாரஇருப்புக்கும்தொடர்ந்து உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் போர்க்களங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏக பேரரசை கட்ட முயலும் நாடுகள்தான்மனிதஉரிமையையும் பொறுப்புக்கூறலையும்போதிக்கின்றன என்பது அபத்தம். இவை இரண்டுமே ஒவ்வாத்தன்மை கொண்டவை. இது பலஸ்தீனப் படுகொலையில்மிகத்தெளிவாகவே உறுதிசெய்யப்பட்டுள்ளது.

2002 பேச்சு முறிவடைவதற்கு அமெரிக்கா காரணமாய் இருந்தது என்பது ஏற்கனவே ஆய்வுகள் மூலம் வெளிவந்த உண்மையாய் உள்ளது.

அதுவே இன்று காஸாவில் போர் நிறுத்தத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றது.

ஐ.நா. சபையும் அதன் ஏனைய அலகுகளும் சர்வதேச சமூகமும் அதன் கட்டமைப்பும் எவ்வாறு முள்ளிவாய்க்காலில் மிகப்பெரிய மனித பேரவலத்தை தடுக்கமுடியாமல் போனதோ அதேபோல் இன்று அவர்களால் பலஸ்தீனப் படுகொலையையும் தடுக்கமுடியாமல் போனது எமக்கு ஆச்சரியத்தை தரவில்லை.

தமிழினத்தின் மீதான கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை பல்வேறு உத்திகளைப்பயன்படுத்தி, புதுப்புது வடிவங்களை எடுத்துள்ளன. அது தமிழினத்தின் தன்னிறைவுப் பொருளாதாரத்தின் மீது, பண்பாட்டின் மீது, கல்வியின் மீது, ஈழத்தமிழினத்தின் மரபுகள் மீது, சைவத்தலங்கள் மீது, தொல்லியல் வரலாறு மீது, ஈழத்தமிழினத்தின் வரலாறு மீதானதாக இருக்கலாம்.

ஈழத்தமிழினத்தின்மீதுதிணிக்கப்பட்டுள்ள உளவியல் போரையும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் வடிவமாகவே கருத வேண்டியுள்ளது.

உளவியல் போரின் நோக்கம், ஈழத்தமிழினம் தமிழ்த் தேசியத்தின் மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கையைச் சிதைத்தலாகும்.

தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கை விழுமியங்கள் தான் ஈழத்தமிழினத்தின் கூட்டுப் பிரக்ஞையை விழிநிலையில் வைத்துக் கொண்டுள்ளது.

தமிழ்த் தேச நிலத்தின் மீதான போரின் பரிமாணங்களின் வடிவங்கள் எல்லாரும் அறிந்ததே. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு தமிழினம் தனது இருப்பின் மீதான அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது.

தமிழினத்தின் இருப்பை சவாலுக்குட்படுத்தும் அலகுகளை எதிர்த்துபோராடவேண்டியவரலாற்றுக் கட்டாயத்துக்குள்தமிழினம்வலிந்து நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுக் கடமை ஒட்டுமொத்த தமிழினத்துக்கானது. யாரும்இப்பெரும்பொறுப்பிலிருந்து விலகிச்செல்ல முடியாத வரலாற்றுத் தேவைக்குள் நாம் இருக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால்,பேரவலத்தின் குறியீடு மட்டுமல்ல, அடக்குமுறை எதிர்ப்பின் குறியீடும்கூட. முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவுநாளில்கொத்துகொத்தாகக் கொல்லப்பட்ட உறவுகளை நினைக்கையில் அவர்கள் சுமந்து வந்த கனவுகளையும் இலக்குகளையும் நினைத்து, குருதி உறைந்து சிவந்துபோன மண்ணிலிருந்து சபதம் எடுக்கின்றோம். எத்தடைவரினும்எமதுஇலக்கைஅடைவோம் என்றும்எம்உறவுகளின்கல்லறைகள் மீது உறுதி எடுக்கின்றோம்.

அதன் அடிப்படையில்,

* நினைவுகூரல் கூட்டுரிமை சார்ந்தது மட்டுமல்ல பண்பாட்டு உரிமையும்கூட. ஆகவே இலங்கை அரசு தமிழினப் படுகொலை நினைவுகூரலைத்தடுக்க முடியாது.

* தமிழினம் தமிழினப் படுகொலைக்கானநீதியைசர்வதேச விசாரணைக்கூடாகவே கோரி வருகின்றது. அக்கோரிக்கையை மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

* தமிழினம்ஒருதனித்துவமான தேசத்திற்குரிய அலகுகளை தன்னகத்தே கொண்ட இனம்.

* கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கூடாக தமிழின இருப்பு கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. இதுவும் இன அழிப்புப் போரின் ஓர் அங்கமென நாம் கருதுகின்றோம்.

* தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்துக்குரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒருபோதும் பராதீனப்படுத்தவியலாதசுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழர்களின் சுயாட்சியைஅங்கீகரிக்கவேண்டும்.

எம் பாசமிகு உறவுகளே, தமிழ் தேசிய விடுதலை தரும் நம்பிக்கையுடன் தொடர்ந்தும் பயணிக்க முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு அழைப்பு விடுக்கிறது என்று வாசித்து முடித்தார்.

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றி வைக்கப்பட்டது. அதன் பின்னர் மெழுகுவர்த்தி ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டிருந்தனர். அங்கு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் காய்ச்சப்பட்டு வழங்கப்பட்டது.

நிகழ்வின்போது அங்கு வந்த பொலிஸார் நினைவேந்தலில் கலந்துகொண் டிருந்த மாணவர்களை அச்சுறுத்தியதுடன், அங்கு கட்டப்பட்டிருந்த கொடிகளையும் அறுத்து எறிந்தனர். எனினும், பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நிலையில், மீண்டும் அவ்விடத்துக்கு சென்ற ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர், அங்கிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுப் பதாகையை அகற்றியதுடன், 'இங்கு சுடர்ஏற்றவேண்டாம்' என்றுகூறியும், அங்கிருந்தவர்களை புகைப்படம் எடுத்தும் அச்சுறுத்தியுள்ளனர்.

அத்தோடு, அங்கிருந்த ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தும்வகையில், கையடக்க தொலைபேசிகளில் சீருடை அணிந்திராத பொலிஸார் வீடியோ எடுத்துதுள்ளனர்.

பொலிஸாரின் அச்சுறுத்தல், அடாவடித்தனத்துக்கு மத்தியிலும் மாணவர்கள் சுடர்களை ஏற்றி மலர் அஞ்சலி செலுத்த முற்பட்டனர். அவற்றைத் தட்டிவிட்டு அந்த அஞ்சலி நிகழ்வையும் பொலிஸார் தடுத்தனர்.

உடனடியாக வாயிலைவிட்டு அகன்றுபல்கலைக்கழகத்தினுள்ளே செல்லுமாறும்,இல்லாவிட்டால்கைது செய்வோம்என்றும்மாணவர்களை பொலிஸார் மிரட்டியுள்ளனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களின் பெயர்களை சேகரிப்பதில் பொலிஸார் தீவிரமாக இருந்தார்கள். பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கஞ்சியினை பரிமாறும் செயற்பாடுகளை மாணவர்கள் முன்னெடுத்தபோதுகஞ்சியைப்பருக முற்பட்டவழிப்போக்கர்களையும்கூட பொலிஸார் அச்சுறுத்தி விரட்டியடித்தனர்.

பின், அங்கிருந்த கஞ்சிப் பானை மற்றும் பாத்திரங்கள், பல்கலைக்கழகத்துக்குசொந்தமான மேசைஎன்பனவற்றைபொலிஸார் அங்கிருந்து எடுத்துச்சென்றனர்.

பொலிஸாரின்இந்தநடவடிக்கை குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

குறிப்பிட்ட காவல்துறை உத்தியோகத்தர் வெளிப்படுத்திய வன்முறை, அவமரியாதை, தற்காலிக நினைவகத்தை தண்டனை குறித்த அச்சமின்றி அவர் அழிப்பது போன்றவை கவனத்தை ஈர்த்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

"ரணில்விக்கிரமசிங்கஅவர்களே! உங்கள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் பொலிஸ்மாஅதிபரும் சட்டம்மற்றும்அரசியல்அமைப்பை மீறுகின்றனர். இதற்கு உங்கள் பதில் என்ன?" என அவர் கேள்வி எழுப்பினார்.

## கொழும்பிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாவதுஆண்டாகவும்;நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிவில்சமூகசெயற்பாட்டாளர்கள் மற்றும்மனிதஉரிமைகள்ஆர்வலர்களால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு வெள்ளவத்தை தொடருந்து நிலையத்துக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களானஷ்ரீன்ஸரூர்,சுவஸ்திகா அருலிங்கம்,சந்தியாஎக்னெலிகொட, ராஜ்குமார் ரஜீவ்காந்த், கௌதமன், ரத்னவேல், நுவன் போபகே உள்ளிட்ட பலரும், கத்தோலிக்க மதகுருமாரும், பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்றநினைவேந்தல்நிகழ்வில் 'சிங்கள ராவய' அமைப்பினரால் குழப்பம் விளைவிக்கப்பட்டிருந்த நிலையில், இம்முறையும்பிறதரப்பினரால் இடையூறு ஏற்படுத்தப்படக்கூடும்என்றசந்தேகம்நிலவியது. அதன்படி, நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும்எனஅறிவிக்கப்பட்டிருந்த கடற்கரைப்பகுதிக்கு அண்மையில் காலையிலேயே பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அதனையடுத்து 9.30 மணியளவில் அங்கு கூடியிருந்த அனைவரும் ஈகச்சுடரேற்றி, அதில் வெண்ணிற மலர்தூவி போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்தனர். இந்நினைவுகூரல் இடம்பெற்றுக்கொண்டிருந்த தருணத்தில்,பிறிதொருகுழுவொன்று கொடிகளை ஏந்தி கூச்சலிட்டவாறு கடற்கரைப்பகுதிக்குள் உட்பிரவேசித்துநினைவேந்தல்நிகழ்வுக்கு இடையூறு விளைவிக்க முற்பட்டது. அங்குகுவிக்கப்பட்டிருந்தபொலிஸாரால் அவர்கள் தடுத்துநிறுத்தப்பட்டனர்.

அவர்களைக் கண்டதும் நிகழ்வை விரைவாக முடித்துக் கொண்டு அங்கிருந்து அனைவரையும் வெளியேறுமாறும், தாமதமேற்படின் அதன் பின்னர் நிகழக்கூடியவற்றுக்குத் தம்மால் பொறுப்புக்கூறமுடியாது எனவும் பொலிஸ் அதிகாரியொருவர், நிகழ்வில் கலந்துகொண்டிருந்த சட்டத்தரணி ரத்னவேலிடம் எச்சரித்தார்.

இக்குழப்பங்களுக்கு மத்தியில் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய சிவில் சமூக செயற்பாட்டாளர்களான

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# பொத்துவிலில் 2500 ஏக்கருக்கு அதிக காணிகள் விடுவிக்கப்பட உள்ளன

## நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் தகவல்



(எஸ்.அஷ்ரப்கான்)

பொத்துவிலில் சுமார் 2500 இற்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட உள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் தெரிவித்தார்.

'என்ன செய்தார் எம்.பி' எனும் தொனிப் பொருளில் பொத்துவில் பிரதான வீதியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றும்போது -

உங்கள் எம்.பியினுடைய பெருமையை இந்த ஊர் எப்படி புரிந்து இருக்கிறதோ இல்லையோ இந்த ஊருக்கு வெளியில் உள்ள மக்கள் புரிந்து இருக்கிறார்கள் அவர்கள் நிச்சயமாக சாட்சி சொல்வார்கள்.

அம்பாறை மாவட்ட காணி விடுவிப்பு சம்பந்தமாக காத்திரமாக செயற்பட்ட எம்.பி யார் என்று கேட்டால் மக்களுக்கு தெரியும் முஸாரப் எம்.பி. என்று சொல்வார்கள்.

இந்த காணி விடுவிப்புக்காக நான் கடுமையாக செயற்பட்டு வருகிறேன். பொத்துவிலில் சுமார் 2500 இற்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட உள்ளது.

உங்கள் எம்.பியினுடைய பெருமையை இந்த ஊர் எப்படி புரிந்து இருக்கிறதோ இல்லையோ இந்த ஊருக்கு வெளியில் உள்ள மக்கள் புரிந்து இருக்கிறார்கள் அவர்கள் நிச்சயமாக சாட்சி சொல்வார்கள்.

எனவே ஊர் ஒன்றாக இருங்கள் எம்.பி என்பது ஓர் இலக்கல்ல. அதையும் தாண்டி நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கின்றோம் என்றும் கூறினார்.

(05)

# நச்சுத்தன்மைமிக்க போதைப்பொருளுடன் 15 பெண்கள் உட்பட 732 பேர் கைதாகினர்

நாடளாவியரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத்தன்மைமிக்க போதைப்பொருட்களுடன் 15 பெண்கள் உட்பட 732 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 24 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள்களுக்கு அடிமையாகியுள்ள 23 பேரை புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 158 கிராம் ஹெரோயின், 240 கிராம் ஐஸ், 1095 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

# பூவரசந் தீவு அல்-மினாவுக்கு 20 கணினிகள் அன்பளிப்பு



( எச் எம் ஹலால்தீன் )

நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த கனணிகளும் அதற்கான வகுப்பறையும் திறந்து வைக்கும் நிகழ்வு கிண்ணியா அல் மினா மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.வை. ஹதியதுள்ளாஹ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருகோணாமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தவ்பீக், கிண்ணியா வலய கல்வி பணிப்பாளர் முகம்மது சிராஜ்,





கிண்ணியா பிரதேச செயலாளர் எம் எச் எம் கனி, அல் - ஹிக்மா பௌன்டேஷன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷெய்க், கலாநிதி அப்பாஸ் இபாதுல்லாஹ், பெனிபிட் மெய்ன் கைன்ட் நிறுவனத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

எமது பாடசாலை கடந்த 30 வருட யுத்தத்தில் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பாடசாலையாகும். சுமார் 15 வருடங்கள் இலங்கை இராணுவ முகாமாக இயங்கிய, அபிவிருத்தி அடையாத நிலையிலுள்ள பாடசாலையாகும். ஆனால் இது வரை அரசின் எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களுக்குள்ளும் உள்வாங்கப்படாத, புறந்தள்ளப்பட்ட பாடசாலையாகும். இங்கு ஓரிரு மிகப் பழைய, அஸ்பெஸட்டர் சீட்டினால் கூரை அமையப் பெற்ற, மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு கல்வி கற்கும் பாடசாலையாகும்.

இங்கு பல்வேறு பௌதீக வளத் தேவைகள் உள்ளன இதனைப் பார்க்கின்ற ஒவ்வொருவரும் இப் பாடசாலைக்கு உதவ முடியும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களது செயற்றிட்டங்களில் உள்வாங்க முடியும் என பாடசாலை அதிபர் தெரிவித்தார்.(05)



# இத்தாவில் மாதுளைச் செய்கை தோட்டத்திற்கு டக்ளஸ் வருகை



யாழ்ப்பாணம், பளைப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் மாதுளைச் செய்கை மாதிரித் தோட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டுள்ளார்.

பளை இத்தாவில் கிராமத்தில் குறித்த மாதிரி தோட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் மாதுளை பயிர்ச் செய்கையில் எதிர்கொள்ளப்படும் ஏதுநிலைகள் தொடர்பில் துறைசார் அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோருடன் அமைச்சர் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது குறித்த பயிர்ச்செய்கையில் அறுவடைக்காலம் வரையிலான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஊடுபயிர் செய்கையின் பெறுபேறுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இந்நிலையில் குறித்த பயிர்ச்செய்கையின் அறுவடைகளை சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மற்றும் பொதுவான விற்பனை மையம் தொடர்பிலும் இடர்பாடுகள் குறித்தும் தெரியப்படுத்திய விவசாயிகள் குரங்குகளால் ஏபற்படும் அசௌகரியங்கள் குறித்தும் சுட்டிக்காட்டி அவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்துதருமாறும் கோரியிருந்தனர்.

குறித்த தோட்டத்தின் ஏதுநிலைகள் மற்றும் கருத்துக்களை அவதானத்தில் கொண்ட அமைச்சர் அது தொடர்பில் ஆராய்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகளை செய்துதருவதாகக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# தபால் மூலம் அனுப்பப்பட்ட 10 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது



அமெரிக்காவிலிருந்து தபால் விமான சேவை மூலம் சீதுவையில் உள்ள களஞ்சியசாலை வளாகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட 10 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த போதைப்பொருள்களானவை பொதிகளாக்கப்பட்ட வாகன உதிரிப்பாகங்களுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டு பொலன்னறுவை பிரதேசத்தில் உள்ள 25 வயது இளைஞரொருவரின் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்நிலையில், சந்தேக நபரான இளைஞர் இந்த பொதிகளை எடுப்பதற்காக சென்றிருந்த போது அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த பொதிகளில் இருந்த வாகன உதிரிப்பாகங்களிலிருந்து 3 கிலோ 101 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப் பட்டு கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# உலகின் மனச்சாட்சியை உலுக்குமாற மன்னிப்புச் சபை

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15ஆவது ஆண்டு நிகழ்வில் பன்னாட்டு மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகமும் முள்ளிவாய்க்கால் முற்றத்திற்கு நேரில் வந்திருந்து மக்களோடு மக்களாக அஞ்சலி செலுத்தியமை ஊடகங்களின் அதிக கவனத்திற்குரிய செய்தியாக இருந்தது. பன்னாட்டுச் சமூகத்தின் பிரதிநிதியாக அவர் பார்க்கப்படுவதை உணரமுடிந்தது. அவரது வருகையின் முக்கியத்துவத்தால் இலங்கையின் அரசியல் நிலைப்பாடுகளிலேயோ பன்னாட்டுச் சமூகத்தின் நிலைப்பாடுகளிலேயோ மாற்றங்கள் வரப்போவதில்லை, எனினும் பன்னாட்டுச் சமூகத்தின் மீது நம்பிக்கையிழந்து விரக்தியடைந்திருக்கும் தமிழ் மக்களுக்கு அவரது வருகை ஒரு புத்தூக்கியாக அமைதது என்பதை மறுப்பதற்கில்லை.

முள்ளிவாய்க்காலில் உள்ள தலைமை பொதுச் சுடர் தாங்கியின் முன்பாக தரையில் முழந்தாளிட்டு அமர்ந்து பன்னாட்டு மன்னிப்புச் சபையின் செயலாளர் மலர்களைத் தூவி அஞ்சலி செலுத்திய பாங்கு தமிழ் நெஞ்சங்களைத் தொட்டது என்றால், அவர் தனது உரையில் சில உண்மைகளைச் சுட்டிக்காட்டியிருப்பதும் வரவேற்கத்தக்கதாகவே இருந்தது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதில் இலங்கை ஆட்சியாளர்கள் மட்டுமல்ல பன்னாட்டுச் சமூகமும் கவனயீனமாகவே இருக்கிறது என்பதை அவர் அழுத்தமாக அங்கு தெரிவித்தார். தமிழர் மனங்களில் தாங்கலாகவே இருக்கின்ற ஒரு குறையை அவர் முள்ளிவாய்க்கால் மண்ணில் நின்றபடி கூறியது உலக நாடுகளின் மனச்சாட்சியை சிறிதாவது அசைத்துப்பார்க்குமாக இருந்தால் அது மகிழ்ச்சியே.

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பால் விடுக்கப்பட்ட அறிக்கையில்கூட பன்னாட்டுச் சமூகத்தின் மீதான தமிழர்களின் மனத்தாங்கல் வெளிப்படையாகவே தெரிவிக்கப்பட்டிருக்கும். அதற்கான காரணம் பேச்சுக்களுக்கும் தீர்வுக்கும் தமிழர் தரப்பின் ஆயுதப் பலமே தடையாக இருந்ததாக நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டி வந்த பன்னாட்டுச் சமூகம், போர் முடிந்து 15 ஆண்டுகள் ஆகிய பின்னரும்கூட நீதியையோ தீர்வையோ தமிழர்களுக்குப் பெற்றுத் தர உருப்படியாக எதனையும் செய்யவில்லை என்பதுதான். அந்த உணர்வுகளையே மன்னிப்புச் சபையின் செயலாளரும் பிரதிபலித்தார்.

”இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நிலவிய ஆயுதம் தாங்கிய உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட பலருக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு தவறிய இலங்கைய அதிகாரத் தரப்புகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் இணைந்த கவனயீனமான செயற்பாட்டை இன்றைய வருடபூர்த்தி நினைவூட்டுகின்றது.

போரில் இரு தரப்புகளிலிருந்தும் சர்வதேச சட்டங்களையும், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்டங்களை மீறும் வகையிலும் குற்றங்கள் புரியப்பட்டுள்ளமை தொடர்பில் போதியளவு ஆதாரங்கள் காணப்படுகின்றமையை ஐக்கிய நாடுகளின் விசாரணைகள் இனங்கண்டுள்ளது. இருந்தபோதிலும், அவ்வாறான பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் பக்கசார்பற்ற அல்லது சுயாதீனமான தேசிய விசாரணைகளை முன்னெடுக்க எவ்விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், போரின்போது வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் எஞ்சியுள்ள அங்கத்தவர்கள், தமது அன்புக்குரியவர்களை தொடர்ந்தும் தேடிய வண்ணமுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியை நீண்ட காலமாகத் தேடுவதை அவர்களிடமிருந்து அறிந்து கொள்வது மிகவும் மன உளைச்சலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிப்பதற்கு இலங்கை ஆட்சியாளர்களுக்கு பொறுப்புக்கூறலுக்கான உள்ளகக் கட்டமைப்பு சிறந்த தீர்வாக அமைந்திருந்தபோதும் அதனை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளும் வெறும் கண்துடைப்புகளாகவே அமைந்திருந்தன.

உண்மை, நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றுக்காக இன்றும் ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்கள் காத்திருக்கின்றனர். இன்று முள்ளிவாய்க்காலில் நாம் அவர்களுடன் உறுதியாக கைகோர்த்துள்ளோம்’’– என்றார் மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கலாமார்ட்.

அவரது உரை உலக நாடுகளின், குறிப்பாக இலங்கை மீது ஆர்வம் கொண்ட நாடுகளின் மனச்சாட்சியை உலுக்கும், அதன் மூலம் நல்ல மாற்றங்கள் இடம்பெற்றும் என்று எதிர்பார்ப்போம்.

# குழந்தைகளுக்குத் தடுப்பாற்றல் குறைவது, ஏன்?

**கு.கணேசன்**

உலக அளவில் குழந்தைகளுக்குச் சளி, இருமல், மூக்கு ஒழுகுதல், மூச்சுத்திணறல் போன்ற சுவாசத் தொல்லைகள் சமீப காலமாக அதிகரித்திருப்பதாகவும், சுவாசம் தொடர்பிலான வைரஸ், பாக்டீரியா போன்ற தொற்றுகளுக்கு மருத்துவமனையில் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகவும் மருத்துவப் புள்ளிவிவரங்கள் எச்சரிக்கின்றன. இலங்கையிலும் இதே நிலைமைதான். என்ன காரணம்?

இன்றைய குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பாற்றல் குறைந்திருப்பதுதான் இதற்கு முக்கியக் காரணம் என்கிறது அந்தப் புள்ளி விவரத்துக்காக மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வறிக்கை.



### இது கொரோனாவின் விளைவா?

இல்லை. கொரோனா பரவிய மூன்று முக்கிய அலைகளிலும் அது குழந்தைகளை அவ்வளவாக பாதிக்கவில்லை. அதனால் கொரோனா இதற்கு நேரடியான காரணம் இல்லை. அதேசமயம், கொரோனா காலத்தில் குழந்தைகளை நாம் பொதுவெளியில் விடவில்லை. தெருக்களில் விளையாடக்கூட அனுமதிக்கவில்லை. அடுத்த வீட்டுக் குழந்தைகளுடன் பழக அனுமதி யில்லை. இரண்டு வருடங்கள் அவர்களைப் பள்ளிக்கு அனுப்பவில்லை. வீட்டில்தான் அடைபட்டுக்கிடந்தார்கள்.

இப்போது பரவும் வைரஸ் கிருமிகளும் பாக்டீரியாக்களும் அப்போதும் இருக்கத்தான் செய்தன. ஆனால், நாம் குழந்தைகளை ‘ஹவுஸ் அரெஸ்ட்’ செய்துவிட்ட காரணத்தால், அந்தக் கிருமிகளை நம் குழந்தைகள் எதிர்கொள்ளவில்லை.

### தடுப்பாற்றல் இடைவெளி

பொதுவாக, ஒரு நுண்ணுயிரி அல்லது ஒவ்வாத பொருள் உடலுக்குள் புகுந்தால்தான், நம் உடலுக்குள் இயங்கும் தடுப்பாற்றல் மண்டலம் விழித்துக்கொண்டு, அவற்றை எதிர்த்துப் போராட நம்மை தயார்ப்படுத்தும். இல்லையென்றால், ஆள் இல்லாத ’கெஸ்ட் ஹவுஸில்’ காவலாளி தூங்கி வழிகிற மாதிரி சோம்பேறியாகிவிடும். இதுதான் இன்றைய குழந்தைகளுக்கு நிகழ்ந்திருக்கிறது. இந்த நிலைமையைத் ‘தடுப்பாற்றல் இடைவெளி’ (Immunity gap) என்கிறது நவீன மருத்துவம்.

இதன் காரணமாக, இதுவரை தடுப்பூசி சார்ந்த வைரஸ் நோய்களை மட்டுமே எதிர்கொண்ட குழந்தைகள், தற்போது பிற வைரஸ் சார்ந்த நோய்களை எதிர்கொள்ள முடியாமல் அவதிப்படுகின்றனர். ஆகவே, இனிவரும் காலங்களில், நம் குழந்தைகளின் உடலில் புதிய நோய் எதிர்ப்பணுக்கள் (yntibodies) உருவாகவும், புதிய நோய்த் தொற்றுகளை எதிர்த்துப் போராட உடல் திசுக்களை அவை தயார்செய்யவும் நம் குழந்தைகளின் வாழ்க்கை முறைகளை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

அதற்கு பெற்றோர் செய்ய வேண்டியது என்ன?

உடலில் தடுப்பாற்றல் அதிகரிக்கவேண்டுமானால் முதலில் குழந்தைகளின் உணவில் மாற்றம் கொண்டுவர வேண்டும். காரணம், இன்றைய குழந்தைகள் சத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. வண்ணங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மேல்நாட்டு உணவுகள் மீதுதான் அவர்களுக்கு மோகம் அதிகம். சத்துகளில் சமநிலை இல்லாத, சக்கை உணவுகளையே அதிக அளவில் அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். முதலில் இந்தப் பழக்கத்தைச் சரிசெய்யவேண்டும்.

ஊட்டச்சத்துக் குறைபாட்டால் வரும் சவலை ஒரு பிரச்சினை என்றால், ஊட்டச்சத்து மிகுதியால் வரும் உடற் பருமன் அடுத்த பிரச்சினை. இந்த இரண்டுமே குழந்தைகளின் தடுப்பாற்றலைத் தடுக்கும் எதிராளிகள். ஆகவே, தேவையான கலோரிகளோடு, உணவில் எல்லா சத்துகளும் சரிசமமாக இருக்கும்படி பெற்றோர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### துரித உணவைக் குறை

துரித உணவுகளைக் குறைத்துக்கொள்வது இதன் முதல்படி. இவற்றை முழுவதுமாகத் தவிர்ப்பது கடினம் என்பதால் இந்த யோசனை. நமக்குத் தடுப்பாற்றல் தருவதே புரதங்கள்தான். ஆகவே, புரதம் மிகுந்த உணவுகளுக்கு முக்கிய இடம் வேண்டும். சிறுதானியங்கள், முளைகட்டிய தானியங்கள், பருப்பு, பால், தயிர், பனீர், பாலாடை, முட்டை, இறால், இறைச்சி, ஈரல், காளான், பாதாம்பருப்பு போன்றவை தடுப்பாற்றலைக் கூட்ட உதவும் ‘விஐபி’ புரத உணவுகள். இறைச்சியைப் பொறுத்தவரை எண்ணெயில் வறுத்து, பொரித்துச் சாப்பிடுவதைவிட குழம்பு வைத்துச் சாப்பிடுவது நல்லது.

பதப்படுத்தப்பட்ட, பாக்கெட்டுகளில் அடைத்துவிற்கப்படும் உணவுகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். வீட்டில் தயாரித்த உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுங்கள், வெளியில் ஆர்டர் செய்யப்படும் உணவுகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். கடைகளில் பலதரப்பட்ட செயற்கை வண்ணங்களில் தயாரிக்கப்படும் உணவுகளுக்கு ‘டாடா’ காண்பியுங்கள்.

தினசரி பழங்கள், காய்கறிகள், கீரைகளைக் கட்டாயம் சேர்க்க வேண்டும். மாலை வேளைகளில் நிலக்கடலை, சுண்டல், பயறு நல்லது. அத்தோடு நெல்லிக்காய், ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை, தக்காளி, பப்பாளி, மாதுளை போன்றவற்றின் பழச்சாறுகளில் ஒன்றை அருந்தக் கொடுக்கலாம். செயற்கைப் பழச்சாறுகள் வேண்டாம். இன்னும் சொன்னால், பழச்சாறுகளைவிட முழுப் பழங்களாக எடுத்துக்கொள்வதுதான் இன்னும் நல்லது.

குழந்தைகள் காய்கறி, கீரைகளைச் சாப்பிட விரும்புவதில்லை என்று ஒரு புகார் உண்டு. துரித உணவில் அவர்கள் விரும்பும் வண்ணத்திலும் ருசியிலும் காய்களையும் கீரையையும் கலந்து கொடுக்க பெற்றோர் கற்றுக்கொண்டால் இந்தப் புகாருக்கு இடம் இருக்காது.

### தண்ணீர்! தண்ணீர்!

தினமும் 2 இலிருந்து 3 லிட்டர் வரை தண்ணீர் அருந்த வேண்டும். இன்றைய குழந்தைகள் இதில் பெரிய தவறு செய்கின்றனர். பல பள்ளிகளில் கழிப்பறை வசதி சரியில்லாத காரணத்தால், வகுப்பு இடைவேளைகளில் சிறுநீர் கழிப்பதைத் தவிர்க்க, தண்ணீர் அருந்துவதைத் தவிர்க்கின்றனர். அதேசமயம், வீட்டில் மென்பானங்களை அருந்துகின்றனர். இது கூடாது.

அடுத்து, பாக்கெட்டில் அடைக்கப்பட்ட, பதப்படுத்தப்பட்ட நொறுக்குத்தீனிகளையும் உடனடி உணவுகளையும் அடிக்கடி கொடுத்துப் பழக்க வேண்டாம். காரணம், இவற்றில் கலக்கப்படும் பலதரப்பட்ட வேதிப்பொருள்கள் நம் தடுப்பாற்றல் மண்டலத்துக்கு சயனைடுகள்.

### உடற்பயிற்சி அவசியம்

தடுப்பாற்றலை அதிகரிக்க உடற்பயிற்சி செய்ய

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# குழந்தைகளுக்குத் தடுப்பாற்றல் குறைவது, ஏன்?



வேண்டியது மிக முக்கியம். உடல் எடையைப் பாரமரிக்கவும் இது உதவுகிறது. ஆனால், நடைமுறையில் குழந்தைகள் வீட்டுக்குவந்ததும் டியூசன், கோச்சிங், தனித்திறமைகளுக்கான வகுப்புகள் என்று பிஸியாகிவிடுவதால், உடற்பயிற்சிக்குத் தனியாக நேரம் ஒதுக்குவது மிக அரிது.

இவர்கள் வீட்டிலேயே யோகாசனம் செய்யலாம். ஏதாவது ஒரு வகை உடற்பயிற்சி செய்யலாம். மொட்டை மாடியில் நடக்கலாம். தோட்ட வேலைகளைச் செய்யலாம். எல்லாமே நல்லதுதான்.

### கைப்பேசியைத் தள்ளி வை

இன்றைய குழந்தைகளின் நவீன போதைப் பழக்கம் கைப்பேசிப் பயன்பாடு. குழந்தைகள் கைப்பேசியை பயன்படுத்துவது தினசரி 2 மணி நேரத்துக்கும் குறைவாகவே இருக்க வேண்டும் என்கிறது அறிவியல். ஆனால், அவர்கள் தினசரி 3 மணி நேரத்துக்கும் அதிகமாகச் செலவிடுவதாக ஆய்வுகள் சொல்கின்றன.

அதிலும் விடுமுறை காலத்தில் அவர்கள் கைப்பேசி மற்றும் மின்னணு சாதனங்களில் முழு நேரமும் மூழ்கிவிடுவதால், சுறுசுறுப்பு இல்லாமல் இருக்கின்றனர். இதனால் அவர்களுக்கு தூக்கம் மட்டும் குறைவதில்லை, உடலியக்கமும் குறைந்துவிடுகிறது. மூளை உள்ளிட்ட உடல் உறுப்புகள் தங்களை உற்சாகப்படுத்திக்கொள்வதற்கு அவர்கள் தினமும் 8 மணி நேரம் தூங்க வேண்டும். விடுமுறையிலாவது நன்கு உறங்கவிடுங்கள்.

### வேண்டாம் மன அழுத்தம்!

மன அழுத்தம் அதிகரித்தால் தடுப்பாற்றல் குறைந்துவிடும். எனவே, மன அழுத்தத்தைக் குறைக்கும் வழிமுறைகளையும் கையாளவேண்டும். உதாரணமாக, மாணவர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்துக்குள் பாடங்களைப் படிக்க முடியாமல் போவது, வீட்டுப்பாட வேலைகளை முடிக்க முடியாமல் திணறுவது போன்றவை மன அழுத்தத்தைத் தருகின்றன. திட்டமிட்டுப் படிப்பதையும் நேர மேலாண்மையையும் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். மன அமைதிக்காக தினசரி பத்து நிமிடம் தியானம், பிரணாயாமம் மேற்கொள்ளலாம்.

### கோடைக்கால பயிற்சிகள்

வருடம் முழுவதும் புத்தகங்களைச் சுமந்து மதிப்பெண்களை நோக்கியே ஓடிக்கொண்டிருந்த குழந்தைகளுக்கு மனதளவில் ஓய்வு தரும் வகையில் அவர்களின் பாடசாலை விடுமுறைக் காலங்களில் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். அதேசமயம், எந்தக் குழந்தைக்கு எந்தப் பயிற்சி தேவை என்பதைப் பெற்றோர்தான் கணிக்க வேண்டும். அருகில் உள்ளவர்கள் சொன்னார்கள், நண்பர் வீட்டுக் குழந்தைகளைச் சேர்த்திருக்கிறார்கள் என்றெல்லாம் காரணம் கற்பித்துத் தனிப் பயிற்சிகளுக்குக் குழந்தைகளை அனுப்பாதீர்கள்.

முக்கியமாக, விடுமுறையிலும் புத்தகங்களைச் சுமக்க வைக்காதீர்கள். நீச்சல் பயிற்சி, குழந்தைகள் விரும்பும் விளையாட்டுப் பயிற்சி, இசைப் பயிற்சி, கலை போன்றவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கலாம். பெற்றோர் இருவரும் பணிக்குச் செல்வதாக இருந்தால், விடுமுறையிலாவது, குழந்தை களுடன் நேரம் செலவிடத் திட்டமிடுங்கள்.

### தடுப்பூசிகள் உதவும்

தடுப்பாற்றலை அதிகரிக்க குழந்தைப் பருவத் தடுப்பூசிகளை முறையாகப் போட்டுக்கொள்ள வேண்டியது மிக முக்கியம். அத்தோடு, வருடத்துக்கு ஒருமுறை ஃப்புளூ தடுப்பூசியையும் தேவைப்படும்போது நிமோனியா தடுப்பூசியையும் செலுத்திக்கொள்ள வேண்டும்.

எந்த வருடத்திலும் இல்லாமல் இந்த வருடம் வெப்பம் அதிகரித்துள்ளது. அதனால் வீடுகளுக்குள்ளேயே அடைந்த கிடக்காதீர்கள் குழந்தைகளைத் தகுந்த பாதுகாப்புடன் வெளியிடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லுங்கள்.

சுற்றுலா இல்லையென்றால், சொந்த கிராமங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லுங்கள். தாத்தா பாட்டிகளுடன் உறவாட விடுங்கள். உறவினர்களையும் நண்பர்களையும் அறிமுகப்படுத்துங்கள். புதிய குழந்தைகளுடன் பழக விடுங்கள்.

நகர்ப்புறக் குழந்தைகள் அடுக்கக வீடுகளில் ஷோபாக்களில் அமர்ந்து சுகம் கண்டவர்கள். கிராமங்களில் அவர்களை நன்கு விளையாட விடுங்கள். அரை மணி நேரம் வெயிலில் விளையாடினால் அன்றைக்குத் தேவையான வைட்டமின் - டி கிடைத்துவிடும். எலும்பு வலிமைக்கு இது உதவும். அதற்காக, இந்தக் கடுங்கோடையில் பகல் 11 மணி முதல் 4 மணிவரை விளையாட விடாதீர்கள்.

கிராமங்களில் அசுத்தமான புழுதியில் விழுந்து புரண்



டாலும் தடுக்காதீர்கள். உடல் அழுக்கானாலும் கவலைப் படாதீர்கள். சின்னச் சின்ன காயம் பட்டாலும் பரவாயில்லை. அவர்களுக்குக் கிடைக்கிற மகிழ்ச்சியான புதுப்புது அனுபவங்கள் நோய்த் தடுப்பாற்றலை மேம்படுத்த உதவும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஒலுவில் அஷ்ரப் நகர் பிரதேச மாணவர்களுக்கான பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கி வைப்பு

## கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஊடாக



(எம்.எம்.ஜெஸ்மின்)

ஒலுவில் கிராமத்தில் இருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள அஷ்ரப்நகர்எனும்பிரதேசத்தில் வசிக்கின்ற சமுர்த்தி பயனாளர்களுடனான கலந்துரையாடல் சகோதரர் ஏ.அஸீஸ் தலைமையில், எம்.அஸ்கான் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது அப்பிரதேசத்தில்கற்றல்நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களின் நலன்கருதி பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதிகள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தேசியஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதிமுதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன்ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரால் வழங்கி வைக்கப்பட்டன.



இந்நிகழ்வில்அஷ்ரப்நகர்பிரதேச மக்கள், சமுர்த்தி பயனாளர்கள், ஒலுவில் பிரதேசவாசிகள், நலன்விரும்பிகள், பவுண்டேசன் உறுப்பினர்கள், என பலர் கலந்துகொண்டனர்.(05)

# கல்விசாரா ஊழியர் பணி பகிஷ்கரிப்பால் பல்கலைக்கழக பரீட்சைகள் ஒத்திவைப்பு

கல்விசாரா ஊழியர்கள் முன்னெடுத்துவரும் தொழிற்சங்க போராட்டம் காரணமாக பல்கலைக்கழக மாணவர்களின் அனைத்து பரீட்சைகளும் பிற்போடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன் காரணமாக 50 ஆயிரத்துக்கும் அதிகமான பல்கலைக்கழக மாணவர்கள் திட்டமிட்ட காலத்தில் பட்டப்படிப்பை முடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்தார்.

இதனைத்தவிர இந்த வருடம் கல்வி பொதுத் தராதர உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் பட்டிப்படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்காக விவரங்கள் அடங்கியபல்கலைக்கழகஅனுமதிகையேடுவெளியிடும் நடவடிக்கையும் தாமதமாகி வருகிறது.

இதேவேளை, கல்விசாராஊழியார்களின்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான யோசனைகளை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஏற்கனவே அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார் எனவும் பேராசிரியர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை பணி பகிஷ்கரிப்பு தொடரும் என பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் இணை ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். கல்விசாரா ஊழியா0களின் தொழிற்சங்க போராட்டம் 16ஆவது நாளையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(05)

# கல்முனையை துண்டு துண்டாக உடைக்க நான் தயார் தமிழ்த் தலைவர்கள் தயாரா?

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் வாய்ச் சவடால்



(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனையை துண்டு துண்டாக உடைப்பதற்கு நான் தயார். இன ஐக்கியத்திற்காக, சமாதானத்திற்காக கல்முனை மக்களின் அபிவித்திக்காக நான் துண்டாடுவதற்கு தயாராக உள்ளேன். இதற்கு தமிழ் தலைவர்கள் தயாரா? என நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் கேள்வி எழுப்பினார்.

கல்முனை மாநகர கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் தெரிவித்ததாவது:

நான் பயமின்றி குறிப்பிடுகின்றேன் உலகமே நிற்கின்றது நாடு பிரியக் கூடாது என்று, ஆனால் நான் இந்த நகரத்தின் மக்கள் தலைவன் சொல்லுகின்றேன், கல்முனையை நாங்கள் பிரிப்போம். இதற்குதைரியம்உள்ளதமிழ்தலைவர்கள் முன்வரட்டும்.

கொழும்பு மாநகரம் இருக்கின்றது. அங்கு இருக்கின்ற வெள்ளவத்தை மற்றும் இருக்கின்றதமிழ்பிரதேசங்களை வைத்து அங்குள்ள மாநகரத்தை தமிழர்களுக்காக பிரித்துக் கொடுப்பதற்கு ஆக குறைந்தது ஒரு முகநூல் பதிவை ஏனும் இவர்களால் போட முடியுமா?

கல்முனையில் உள்ள விஷேட அம்சம் என்ன வென்றால் நான்கு சமூகங்கள் இருக்கின்றன. அவர்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். எனவேதான் தமிழ் இளைஞர்கள், புத்திஜீவிகள் நாங்கள் இணைந்து இந்த மக்களுக்காக ஒற்றுமையாய் பயணிக்க வேண்டும். ஒற்றுமையாக வாழ வேண்டி இருக்கின்றது அதற்கான அழைப்பை நான் விடுக்கின்றேன். - என்றார்.(05)


முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## முள்ளிவாய்க்கால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லெண்ணாத் துயரத்தையும், மீண்டெழுதலையும் அடையாளப் படுத்துகிறது. மே 2009, முல்லைத் தீவின் போர்ச் சூனியப் பிரதேசங்களில் (No-fire zone) 150,000 - 190,000 வரையான தமிழ்மக்கள் சிக்குண்டிருந்தனர்,

தொடர்குண்டுத்தாக்குதல்களால் இந்தப்பிரதேசத்தில் பசியும் சாவும் நிறைந்திருந்தது. அரிசியும், தண்ணீரும், கையிருப்பிலிருந்த உப்பும் சேர்த்து தயாரிக்கப்பட்ட இந்தக் கஞ்சி, 15 வருடங்களுக்கு முதல் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்காப்பானக இருந்தது. இதுவே ஒரு அடக்கப்பட்ட சமூகத்தின் பிழைத்தலுக்கும் ஒருங்கிணைப்புக்கும் அடையாள மானது.

படுகொலைசெய்யப்பட்ட, வலிந்து காணமலாக்கப்பட்ட தமிழர்களை நினைவுகூருவதில் அரசின் கட்டுப்பாடுகளும், அடக்குமுறைகளும் பிரயோகிக் கப்படும்போதும் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரித்து பகிர்ந்தளித்தல் நினைவேந்துதலின் வலிமையான செயற்பாடாகும். இது ஒரு சடங்காக, ஒரு சமூகத்தின் ஒன்றுபடும் சமூக உணர்வையும், சகிப்புத்தன்மை மற்றும் புரிந்துணர்வின் தேவையையும் வலியுறுத்துகிறது.

பாதிப்புக்குள்ளானவர்களின் அனுபவங்களை அங்கீகரிப்பதும், அவர்களின் நினைவுகளை பாதுகாப்பதும்இனநல்லிணக்கத்தின் முக்கிய கூறுகளாகும். மக்கள் தங்களுடைய துயர் பகிர்ந்து , படுகொலைசெய்யப்பட்ட உறவுகளையும், கசப்பான நினைவு களையும் நினைவுகூருவதற்கான இடமொன்றை, வெளியொன்றை உருவாக்குதலே இதுபோன்றதொரு பெருந்துயரம் மீண்டும் நடப்பதைத் தவிர்ப்பதற்கான வழிமுறையாகும். நல்லிணக்கமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப கடந்தகாலத்தை எப்பொழுதும் நினைவுகூருதல் வேண்டும். இலங்கைவாழ் தமிழர்களின் அமைதியான நினைவேந்தல் நிகழ்வுகளே இலங்கையில் சமத்துவமும் இன நல்லிணக்கமும் ஏற்படுவதற்கு இன்றியமையாதவையாகஅமையக் கூடியன என்பதை அனைத்து இன மத சமூக குழுமங்களும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது.

## போர் முடிந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர். வரிசையில் மக்களோடு மக்களாக நின்று, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பொதுச் சுடர் முன்பாக முழந்தாளிட்டு அமர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார் அவர்.

அதன் பின்னர் அங்கு செய்தி யாளர்களிடம் கருத்துப் பகிர்ந்து கொண்ட அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நிலவிய ஆயுதம் தாங்கிய உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்ட பலருக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு தவறிய இலங்கைய அதிகாரத் தரப்புகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் இணைந்த கவனயீனமான செயற்பாட்டை இன்றைய வருடபூர்த்தி நினைவூட்டுகின்றது.

15 வருடங்களுக்கு முன்னர் போரின்இறுதிநாட்களில்உயிரிழந்த பெருமளவான அப்பாவிப் பொது மக்கள் உயிர் நீத்த பகுதியில் இன்று நாம் மிகவும் துயரத்துடன் நிற்கின்றோம்.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக, போரின்போதுதாம்இழந்தவர்களை நினைவுகூரும் வகையில் தமிழ் சமூகத்தார் முன்னெடுத்திருந்த முயற்சிகளை தடுக்கும் வகையில் கைதுகள், பலவந்தமாக தடுத்து வைப்புகள் மற்றும் வேண்டுமென்றே தவறான கருத்துகளை பரப்பியிருந்தமை போன்ற நினைவுகூரலை தடுக்கும் வகையிலான சம்பவங்களை நாம் அவதானித்திருந்தோம்.

உயிர் நீத்தவர்களை நினைவு கூரவும், தமது அன்புக்கு ரியவர்களுக்காக அமைதியான முறையில் ஒன்றுகூடி தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும் மக்களுக்கு உள்ள உரிமைக்கு அதிகாரத்தரப்பினர் மதிப்பளிக்க வேண்டும்.

போரில் இருதரப்புகளிலிருந்தும் சர்வதேச சட்டங்களையும், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்டங்களை மீறும் வகையிலும் குற்றங்கள் புரியப்பட்டுள்ளமை தொடர்பில் போதியளவு ஆதாரங்கள் காணப்ப டுகின்றமையை ஐக்கிய நாடுகளின் விசாரணைகள்இனங்கண்டுள்ளது. இருந்தபோதிலும், அவ்வாறான பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் பக்கசார்பற்ற அல்லது சுயாதீனமான தேசிய விசாரணைகளை முன்னெடுக்க எவ்விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன்,போரின்போதுவலிந்து காணாமலாக்கப்பட்டகுடும்பங்களின் எஞ்சியுள்ள அங்கத்தவர்கள், தமது அன்புக்குரியவர்களை தொடர்ந்தும் தேடிய வண்ணமுள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதியை நீண்ட காலமாகத் தேடுவதை அவர்களிடமிருந்து அறிந்து கொள்வது மிகவும் மன உளைச்சலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிப்பதற்கு இலங்கை ஆட்சி யாளர்களுக்கு பொறுப்புக்கூரலுக் கானஉள்ளகக்கட்டமைப்பைசிறந்த தீர்வாக அமைந்திருந்தபோதும் அதனை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் வெறும் கண்துடைப் புகளாகவே அமைந்திருந்தன.

இந்த வாரத்தின் முற்பகுதியில் ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலும், இலங்கையின் பொறுப்புக்கூரல் செயற்பாடுகளில் காணப்படும் இடைவெளிகள் காரணமாக, இந்த விடயம் தொடர்பான கறைகள் மாறாமல் காணப்படுவதை வெளிப்படுத்தியிருந்தது.

உண்மை, நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றுக்காக இன்றும் ஆயிரக்கணக்கான பாதிக்கப் பட்டவர்கள் காத்திருக்கின்றனர். இன்று முள்ளிவாய்க்காலில் நாம் அவர்களுடன் உறுதியாக கைகோர்த்துள்ளோம் - என்றார்.

## கண்ணீர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகள் பூர்த்தியாகின.

அதனை நினைவுகூரும் வகையில் முள்ளிவாய்க்காலில் இம்முறையும் பொது நினை வேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பொதுச் சுடர் தாங்கியில் முற்பகல் 10.30 மணியளவில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் நிலைவேந்தல் தொடர்பான நினைவுப் பேருரையும் ஆற்றப் பட்டது.

அடுத்து, மணி ஒலி எழுப்பப் பட்டுஅகவணக்கம்செலுத்தப்பட்டது.

பின்னர், போரில் முள்ளிவாய்க் காலில் கணவனை இழந்த முள்ளி யவளையைச்சேர்ந்த பெண்ணொ ருவரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அவரைத் தொடர்ந்து, ஏனையவர்களும்தங்கள்உயிரிழந்த உறவுகளை நினைத்து சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தினர். அதன் பின்னர், தொடர்ச்சியாக, முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கு மத தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்நினைவேந்தலின் முக்கிய விடயம், முள்ளிவாய்க்கால் நிறைவேந்தல்முற்றத்துக்குச்சென்ற சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கலாமார்ட் (Agnès Callamard) நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

# ஆலமரம் நிற்கிறது !



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா

அழகான ஆலமரம்
கிளைவிட்டு நின்றதங்கே
விழுதெல்லாம் விட்டுஅது
வேரோடி நின்றதங்கே

ஆலமர நிழல்தேடி
அனைவருமே வருவார்கள்
வேலையில்லா நிற்போரும்
விரும்பி வந்திருப்பார்கள்

காலைமாலை என்றின்றி
காளையரும் வருவார்கள்
சேலையுடன் பெண்கள்வந்து
சிரித்து விளையாடிடுவர்

நாலுமணி ஆனவுடன்
ஆளரவம் கூடிவிடும்
ஓடிடுவார் ஆடிடுவார்
உல்லாசம் கூடிவிடும்

பந்து விளையாடிடுவர்
சிந்து கவிபாடிடுவர்
கெந்தி அடித்துநிற்பர்
கிட்டிப் புள்ளும்ஆடிடுவர்

பெரியவரும் வருவார்கள்
சிறியவரும் வருவார்கள்
பேசாமல் ஆலமரம்
பெருமையுடன் வரவேற்கும்

விழுது பற்றியாடிடுவர்
மேல்மரத்தில் ஏறிடுவார்
அழுங்குழந்தை ஆடுதற்கு
அங்கூஞ்சல் கட்டிடுவார்

சீட்டு விளையாடிடுவர்
சிரித்து விளையாடிடுவர்
ஆர்ப்பரித்துச் சிறுவரெலாம்
அங்கங்கே ஓடிநிற்பர்

வேர்க்கடலை கொறிப்பாரும்
வெற்றிலையை மெல்வாரும்
பாற்பொருளை உண்பாரும்
பார்த்திடலாம் மரநிழலில்

ஆயிரம் பேரமர
ஆலமரம் நிழலைத்தரும்
அனைவருமே இளைப்பாறி
அகமகிழ்வு பெற்றிடுவர்

சித்திரை பிறந்துவிட்டால்
எத்தனையோ கொண்டாட்டம்
நித்திரையே கொள்ளாது
நீண்டகூத்து நடக்குமங்கே

வடமோடி தென்மோடி
வகைவகையாய் கூத்தங்கே
பாய்விரித்துப் பார்த்தபடி
பார்த்திடுவார் ஊரார்கள்

தேனீர்க்கடையும் வரும்
தித்திப்புக்கடையும் வரும்
அப்பம்சுட்டு விற்கின்ற
ஆச்சியும் வந்திடுவார்

கடலையும் வறுப்பார்கள்
கச்சானும் வறுப்பார்கள்
கமகமக்கும் வாசனையால்
களைகட்டும் ஆலையடி

குடும்பமெலாம் ஒன்றாக
குதூகலமாய் இருப்பார்கள்
குழந்தைகளும் குறும்புசெய்து
குதூகலத்தில் மிதப்பார்கள்

அமைதியாய் பார்த்துநிற்கும்
அதையெல்லாம் ஆலமரம்
ஆர்வந்து போனாலும்
ஆலமரம் அகமகிழும்

போரொன்று வந்ததனால்
ஊரெல்லாம் ஓடிற்று
யாருமே ஊரிலில்லை
ஊரிப்போ உறங்கிறது

களைகட்டி நின்றவிடம்
நிலையிழந்து நிற்கிறது
ஆருமே வருவதில்லை
ஆலமரம் நிற்கிறது

ஆலமரம் மட்டுமிப்போ
அப்படியே இருக்கிறது
ஆலடியைப் பார்ப்பதற்கு
அழுகைதான் வருகிறது

மரம்மட்டும் பேசிவிடின்
வக்கிரங்கள் தெரிந்துவிடும்
மரமாக இருப்பதனால்
வக்கிரங்கள் தொடர்கிறது

ஆலமரம் அழுதுவிடின்
ஆறாக ஆகிவிடும்
அதுமரமாய் நிற்பதனால்
நாமழுது நிற்கின்றோம்

## முள்ளிவாய்க்கால்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றினார்கள். முள்ளிவாய்க்கால் கப்பல் வீதியில் உள்ள கடற்கரைப் பகுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

காலை 7.30 மணி முதல் கப்பல் வீதியில் உள்ள கடற்கரைப் பகுதியில் விசேடமாக போடப்பட்ட பந்தலில் நேர்த்தியான முறையில் பிதிர்க்கடன் செய்யும் வழிபாடும், ஆத்மசாந்திக்கானபிரார்த்தனையும் இடம்பெற்றன.

உறவுகளை இழந்த பெருந்திரளானோர் பிதிர்க்கடன் வழிபாட்டில் இறந்தவர்களின் பெயர்களைக் கூறி பிதிர்க்கடனை நிறைவேற்றினர்.

தமிழின படுகொலையின் 15ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் தொடங்குவதற்கு முன்னதாக இந்த பிதிர்க்கடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமுறைக்கு கடத்தும் நோக்கில் அரச பயங்கரவாதத் தினால் நேர்ந்த இனப்படுகொ லைகளை திகதி வாரியாக தொகுத்து யாழ்ப்பாணத்தில் ஆவண காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

'தமிழினப்படுகொலை சாட்சிய முற்றம்' என்ற பெயரில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஆவணப் பிரிவினரால் இந்த ஆவணக் காட்சியகம் அமைக்கப்பட்டிருந்தது.

அரசின் பயங்கரவாதத்தினால் நாம் அனுபவித்தவற்றை ஆவணப்படுத்தல் மற்றும் நினைவுகூரல் மூலம் அடுத்த சந்ததியினருக்கு நாம் இழந்தவற்றையும், எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் கடத்திச் செல்ல வேண்டும் என காட்சியக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அதனைப் பார்வையிட்டனர்.

வார விடுமுறைக்காக தெற்கில் இருந்து வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் பலரும்கூட இந்த காட்சியகம் மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளை நேரில் கண்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

## கொழும்பிலும்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

சந்தியா எக்னெலிகொட, மிலானி மற்றும் ராஜ்குமார் ரஜீவ்காந்த் ஆகியோர், போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்கள்கடந்திருக்கும்நிலையில், போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரவேண்டியதன் தேவைப்பாட்டையும், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிசெய்யப்படவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிப் பேசினர்.

அதேபோன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் முள்ளிவாய்க் கால்கஞ்சியைவிநியோகிப்பதற்கும், உயிர்நீத்த உறவுகளை நினைவுகூருவதற்கும் தடைவிதிக் கப்பட்டு, இடையூறுகள் ஏற்படுத்தப் பட்டமை குறித்து தமது கண்டன த்தையும் அவர்கள் வெளிப்படுத் தினர். அதன் பின்னர் அனைவரும் ஒன்றிணைந்து வெள்ளை மலர்களை கடலில் தூவி உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலிசெலுத்தினர்.

நினைவேந்தல் நிகழ்வுக்கு சற்றுத் தாமதமாக வருகைதந்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் முன்னாள் ஆணையாளரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான மிராக் ரஹீம் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் தண்டவாளத்துக்கு அண்மையி லேயே பொலிஸாரால் தடுத்துநிறுத் தப்பட்டனர். நிகழ்வில்குழப்பம்விளை விப்பதற்கெனகுழுவொன்றுவருகை தந்ததாகவும், எனவே தாமதமாக வந்த செயற்பாட்டாளர்களை தாம் அறிந்திருக்காததன் காரண மாக அவர்களையும் உள்ளே அனுமதிக்கவில்லை எனவும் பொலிஸார் அதற்கு விளக்க மளித்தனர்.

அனைவரையும்வெகுவிரைவாக அங்கிருந்து கலைந்துசெல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, அனைவரும் கலைந்து சென்றனர்.

## தமிழினப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழினப்படுகொலை நினைவேந்தல் நேற்று வடகிழக் கில் உணர்வுபூர்வமாக அனுஷ் டிக்கப்பட்ட நிலையில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நிகழ்வு கிழக்கிலும் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட நிலையில், மட்டக்களப்பு காந்தி பூங்காவிலும் பெரும் எழுச்சி பொங்க நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. அந்த நிகழ்விலேயே சிவில் சமூகங்களின் சார்பில் இனப்படுகொலையை அங்கீகரிக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

சமூகம் சார்ந்த அமைப்புகள், பெண்கள் சங்கங்கள், மீனவர் மற்றும் விவசாயிகள் சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் இணைந்த வடகிழக்கு மாகாண தமிழ் மக்கள் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலுமிருந்து வந்த பெருமளவான மக்களும் இந்த நினைவேந்தலில் கலந்துகொண்டனர்.

சிவில் சமூக செயற்பாட்டாளர் கண்டுமணி லவகுகராஜா தலைமையில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

இதன்போது இறுதி போரினைக் குறிக்கும் வகையில் வெள்ளைக்கொடிகளை தாங்கி யவாறு 'தமிழினப்படுகொலைக்குநீதி கொடுங்கள்', 'வடகிழக்கு இணைந்த தீர்வினை வழங்கு' போன்ற கோசங்களை எழுப்பியவாறு கவனவீர்ப்புப் பேரணி ஒன்றும் காந்தி பூங்காவில் நடத்தப்பட்டது.

இந்த பேரணி நினைவேந்தல் நடைபெறும் இடத்தை அடைந்த பின்னர், அங்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அதனைப் போரால் பாதிக்கப்பட்டு இழப்புகளை எதிர்கொண்ட குடும்பங்களின் உறவுகள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளின் நினைவாக ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

அதனை தொடர்ந்து தமிழின அழிப்புக்கு நீதி கோரியும் தமிழர்களுக்கான தீர்வினை வலியுறுத்தும் வகையிலும் மகஜர் ஒன்று சர்வதேச சமூகத்துக்கு அனுப்பிவைக்கும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் இஸ்ஸடீனிடம் வழங்கிவைக்கப்பட்டது.

அந்த மகஜரில் தமிழர்களின் இழப்புகளுக்கான நீதியும் அவர்களுக்கான தீர்வும் வலியுறுத்தப்பட்டது.

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2024ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள விளிம்புநிலை மக்கள், அடிமட்ட சிவில் சமூகங்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் ஒன்றிணைந்து போரில் கொல்லப்பட்ட எமது அன்புக்குரியவர்களை நினைவுகூருகிறோம்.

இத்தீவின் சிறுபான்மை இனத்தவர் என்ற வகையில், மூன்று தசாப்தங்களாக எமக்கெதிராக அரசினால் நடத்தப்பட்ட இரக்கமற்ற போரினால் வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்களாகிய நாங்கள் பாதிக்கப்பட்டுள்ளோம்.

2009ஆம் ஆண்டில், போரின் கடைசிக் கட்டங்களில் கைக்குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் முதியவர்கள் உட்பட பொதுமக்கள் தொடர்ச்சியான செல் தாக்குதல்களாலும், வான்வெளித் தாக்குதல்களால் கொல்லப்பட்டனர். பொதுமக்கள் வசிக்கும் இடங்கள் குறிவைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 'மோதல் தவிர்ப்பு வலயம்' என அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் இருந்த பொதுமக்களுக்கு எதிராக இலங்கை அரசு இரசாயன குண்டுகள் மற்றும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியது. ஆதாரங்களின்படி 40,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் போரின் கடைசி கட்டத்தில் கொல்லப்பட்டனர். பல ஆயிரம் பேர் காயம் அடைந்தனர். கைகால்களை இழந்தனர். அவர்களில் பலர் இன்னும் தங்கள் உடலில் குண்டு சன்னங்களுடனும் மற்றும் தோட்டாக்களுடன் வாழ்கின்றனர்.

உணவு மற்றும் மருத்துவப் பொருட்கள் தடைபட்டதால், பட்டினியும் பசியும் நிலவியது. மக்களுக்கு உப்பு இல்லாமல் அரிசி கஞ்சி (கஞ்சி) வழங்கப்பட்டது. குழந்தைகள் கஞ்சி சேகரிக்கச் சென்றபோது அவர்கள் செல் தாக்குதலில் சிக்கினர்.

பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் மற்றும் முதியோர்கள் வரிசையில் நின்று உணவுப் பொருட்களை சேகரித்தபோது, அவர்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. மக்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள தங்கள் அன்புக்குரியவர்களின் சடலங்களை விட்டு வெளியேறினர்

போரின் முடிவில் ஆயிரக்க ணக்கான ஆண்களும் பெண்களும் அரச இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டனர். திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று நம்பி குடும்பங்கள் தங்கள் குழந்தைகளை இராணுவத்திடம் ஒப்படைத்தனர். ஆனால் அவர்களில் பலர் இராணுவத்தினரால் சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்டவர்கள் இன்னும் திரும்பவில்லை. அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

தமிழ் சமூகம் இன்னமும் கூட்டுப் பேரதிர்ச்சியில் தவித்துக் கொண்டிருக்கிறது. போரின் கடைசிக் கட்டத்தில் 40,000க்கும் மேற்பட்ட தமிழர்களின் கூட்டுத் துன்பங்களும் பாரிய படுகொலைகளும் இனப்படுகொலையாக சர்வதேச சமூகத்தினாலோ அல்லது தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்களினாலோ இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, தமிழ் இனப்படுகொலையை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தையும் இலங்கை அரசாங் கத்தையும் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

- வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வு
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான உண்மை மற்றும் நீதி
- போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல்
- பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் நபர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்
- வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் இராணுவமயமாக்கலை முடிவுக்கு கொண்டுவருதல்
- வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உள்ள அனைத்து வகையான நில ஆக்கிரமிப்புகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்
- சிறுபான்மை மத மற்றும் கலாச்சார தளங்களை ஆக்கிரமிப்பதை உடனடியாக நிறுத்துங்கள்
- பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்புச்சட்டம் ரத்து செய்யுங்கள் - என்றுள்ளது.







# 30 வருட கால போரை முடிவுக்குக் கொண்டு வந்த படையினரை கௌரவப்படுத்தும் சிறப்பு நிகழ்வு



போரை முடிவுக்குக் கொண்டுவந்த படையினரைக் கௌரவிக்கும் நிகழ்வு கிண்ணியா நத்துவத்தில் புகாரி ஜும்மா பள்ளிவாயலில் கிண்ணியா சமூக நலன் விரும்பிகள் சங்கத்தின் தலைவர் சதாத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வின் அதிதியாக கிண்ணிய பிரதேச



செயலாளர் எம் எஸ் எம் கனி, மதரஸா மாணவர்கள் சங்கங்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஓ ரீகன் பாலத்துக்கு முன்னால் ஆரம்பித்த ஊர்வலம் கிண்ணியா புகாரியாடி சுற்று வட்டாரத்தை சுற்றி மீண்டும் புகாரி பள்ளிவாயலை அடைந்தது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச செயலாளர் எம் எச் எம் கனி கருத்து தெரிவிக்கும் போது -

இந்த நாட்டில் மீண்டும் ஒரு பயங்கரவாதம் ஏற்படக்கூடாதுமீண்டும்ஒருயுத்தம்ஏற்படக்கூடாது இனங்களுக்கிடையிலே ஒற்றுமை ஏற்பட வேண்டும். - என்றார்.

கிண்ணியா பொது மக்கள் நலன்புரி சங்கத்தின் தலைவர் இப்ராஹிம் சதாத் கருத்து தெரிவிக்கும் போது -

ஆயுத கலாசாரத்தை முஸ்லிம் சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயுத கலாசாரத்துக்கு எதிராகவுமே இந்த ஊர்வலம். இதன் மூலம் பிற சமூகம் எவ்வாறு நாங்கள் உள்ளோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவுமே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

நாட்டை பாதுகாத்த வீரர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு ஜனாதிபதி



மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த அவருக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இனமத பாகுபாட்டுக்கு அப்பாலே ஆயுத கலாசாரத்தை நாம் எதிர்க்கின்றோம் என்பதை இதன் மூலம் தெரியப்படுத்துகின்றோம்.(05)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி தம்பலகாமத்தில் வழங்கல்



திருகோணாமலைதம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவு உட்பட்ட நாலுவாசல்பிள்ளையார்கோயிலில் நேற்று காலை 11.30 மணியளவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டு முள்ளிவாய்க்காலில் இறந்துபோன மக்களின் ஞாபகார்த்தமாக இரண்டு நேர மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

பின்னர் கைவினை வழங்கி பலரும் பகிர்ந்து கொண்டதோடு கஞ்சியை அருந்தக்கூடியதை காணக்கூடியதாக இருந்தது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும்வாரத்தின்இறுதிநாளாகிய இன்று தம்பலகாமம் வாழ் மக்கள் சார்பாகநிகழ்வுஏற்பாடுசெய்யப்பட்டு இருக்கின்றது.

இறுதி யுத்தத்தின்போது எமது முன்னோர்கள் கஞ்சியை வழங்கி தமது உயிர்களை காத்தமையை நினைவு கூரும் முகமாகவும் எதிர்காலத்தில்இரத்தம்சிந்தக்கூடாது என்பதற்காகவோமே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மக்களின் துன்பத்தை வெளி உலகத்திற்கு காட்டுவதற்காகவும் இனி இவ்வாறு துன்பத்தை எதிர்காலத்தில் இடம்பெறக்கூடாது என்பதற்காகவே ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தகஞ்சிவழங்கியது என்பது நாங்கள் மகிழ்ச்சி அடைய முடியாது துன்பம் தான் கொள்கின்றோம்.

இது இறந்த அனைத்த மக்களுக்காக செய்வதை அன்றி இயக்கம் சார்பாக செய்யவில்லை. (05)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மன்னாரிலும் நேற்று அனுஷ்டிப்பு

இறுதிப்போரில் கொல்லப்பட்ட உறவுகளை நினைவுகூரும் 15 ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று (சனிக்கிழமை) வடக்கு, கிழக்கு பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், மன்னாரில் நேற்று காலை 8.30 மணியளவில் முள்ளிவாய்க்கால்நினைவேந்தல்நிகழ்வுநடைபெற்றது.

தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வா சிலையருகில்இந்தநினைவேந்தல்அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுச்சுடரை அருட்தந்தை நவரட்ணம் அடிகளார் ஏற்றி, மாலைஅணிவித்துநினைவேந்தலைஆரம்பித்து வைத்தார். அவரை தொடர்ந்து, மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், மக்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் 15ஆவது ஆண்டு நினைவேந்தலைமுன்னிட்டுதமிழ்தேசியவாழ்வுரிமை இயக்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழின படுகொலை இடம்பெற்று பதினைந்து ஆண்டுகள் ஆகியும் எதுவுமே மாறவில்லை.

இனப்படுகொலை இடம்பெற்று 15 ஆண்டுகள் ஆனபோதும் எந்த மாற்றமும் நிகழவில்லை. பல்வேறு விதமான ஆணைக்குழுக்கள் அனைத்தும் பயனற்றுப் போனது. தமிழ் அரசியல்வாதிகளும் ஒழுங்குமுறையான திட்டமிட்ட தொடர் நடவடிக்கை எதையும் இனப்படுகொலை விவகாரத்தையும் முன்னோக்கி நகர்த்தவில்லை.

அரசாங்கத்தால் மனித உரிமைமீறல்கள், ஒடுக்குமுறை, தனிமனித பேச்சு சுதந்திர அடக்குமுறை, பயங்கரவாத விசாரணைகள், அச்சுறுத்தல்கள், சிவில் செயற்பாட்டில்இராணுவதலையீடு, பௌத்த ஆக்கிரமிப்பு, ஏகாதிபத்தியம், அரசியல் வேற்றுமைகள், மாற்றுக் கருத்துக்களை முடக்குதல், சிவில்செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தல் என்பன தொடர்கின்றன.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனங்களில் எந்த மாற்றத்தையும் ஏற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, தொடர்ந்து வலியையே ஏற்படுத்தி வருகிறது.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எந்த முன்னேற்றமும்நிகழவில்லை. ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் அர்த்தம் இல்லாத - நடைமுறைச் சாத்தியமற்ற தீர்மானங்களை - காலத்துக்கு காலம் எடுத்ததே தவிர, அதனால் பாதிக்கப்பட்ட தரப்புக்கு எந்த மாறுதலும் நிகழவில்லை. வெறும் காகிதங்களுடன் முடங்கிப்போனது.

மனித உரிமை ஆர்வலர்கள் என உலகின் பல பாகங்களிலும் இருந்து இங்கு வந்து எம்மை வேடிக்கை பார்த்தனரே தவிர நீதியை நிலைநாட்டவில்லை.

உலகில்'கனவான்கள்'எனவேடம்தரித்தஎல்லோரும் சேர்ந்தே முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அரங்கேற்றினார்கள். அவர்களிடம் நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும். இந்த உலகம் வலியோனுக்கு நீதியையும் அறத்தையும் நியம நியதிகளுக்குள் ஒருபோதும் நிலைநாட்டியதாக எங்கும் வரலாறு இல்லை. எல்லாம் நலன் சார்ந்த நிகழ்தகவுகளே.

அநீதியை விதைத்தவனிடம் நீதியின் நிர்ணயத்தை எதிர்பார்க்க முடியுமா? இலங்கை அரசு மட்டுமல்ல, சர்வதேசமும் எம்மைத் தொடர்ந்து ஏமாற்றுகிறது, ஏமாற்றியது. இனப்படுகொலையின் பங்குதாரராகியது.

நீதிபோதிக்கும்சமதர்மம், மனித உரிமை, வாழ்வியல் உரிமை என உச்சரிக்கும் அநீதிக்கு துணை போகும் நீதி இல்லா நாதியற்ற போலி கனவான்களே, இனியாவது உங்கள் ஏமாற்று வேலையை நிறுத்திக்கொள்ளுங்கள்.

இந்த உலகம் இனியும் உங்களை நம்பத் தயாரில்லை. 15 ஆண்டுகளில் உங்கள் ஏமாற்று வித்தைகளை எல்லாம் பாதிக்கப்பட்ட தரப்புகள் நன்கு உணர்ந்துவிட்டன.

ஆகவே, எமக்குள் நாம் பேதங்களை கடந்து இனத்துவ, மொழித்துவ, வாழ்வியல், சுயநிர்ணய உரித்துக்களை பெற ஒருமித்து ஒருங்கிணைவதே ஒரே வழி.

அதுதான் எமக்கான நீதியை நாமே பெற்றுக்கொள்வதற்கான வழியும் கூட. 15 ஆண்டுகள் வெறுமையாக பயனின்றி கடந்துவிட்டது என்பதே கசப்பான உண்மை. இதற்கு வல்லான்மையற்ற தமிழ் தலைவர்களும் பொறுப்புக்கூற வேண்டும். ஆகவே, தமிழர் ஒரே தேசமாக திரள்வோம். அதுவே நமக்கான இன்றைய தேவை. இல்லையேல் முள்ளிவாய்க்காலில் மரணித்த ஆன்மாக்கள் நம்மை ஒருபோதும் மன்னிக்காது.

அது நிகழாத வரை சிங்கள தேசம் நம்மை பிரித்தாளும் வேலையே தொடர்ந்து செய்யும். ஆகவே, விழித்துக்கொள்ள வேண்டியது நாம் தான். - என்றுள்ளது. (05)









காலைக்கதிர் Kalaikkathir

# குமரபுரத்தில் படுகொலையானவர்களுக்கு மட்டக்களப்பு சிவில் சமூகத்தினர் அஞ்சலி



திருகோணமலை மாவட்டம் குமரபுரத்தில் படுகொலை செய்யப் பட்டவர்களுக்கு மட்டக் களப்புசிவில்சமூகத்தினர் வெள்ளிக்கிழமைமாலை அஞ்சலி செலுத்தி யுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு வாரத்தின் ஏழாவது நாளான வெள்ளிக்கிழமை இந் நிகழ்வுஇடம்பெற்றுள்ளது. முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்து வதற்காகச் சென்ற மட்டக்களப்பு சிவில் அமைப்பினரே திருகோணமலை குமரபுரத்தில் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.



இதன்போது மட்டக்களப்பு சிவில் சமூக்தின் சார்பில் வி.லவகுமார், அருட்தந்தையர்களான க.ஜெகதாஸ் அடிகளார், த.ஜீவன் அடிகளார், ஜெ.ஜோசப்மேரி அடிகளார், மற்றும் ரஜனி உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டனர்.



இதன்போது கருத்துத் தெரிவித்த அருட்தந்தை க.ஜெகதாஸ் அடிகளார் -

இந்த குமரபுரத்திலே இலங்கை அரசாங்கத்தின் இன அழிப்பாக 1996 ஆம் ஆண்டு விசேட அதிரடிப்படையினரால், பல மக்கள் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த மக்களுக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை. அதில் எஞ்சிய மக்கள் இது தொடர்பில் இராணுவத்தினரே படுகொலை செய்ததாக வாக்குமூலமளித்திருந்தார்கள்.

பின்னர் நீதிமன்றத்திலே வழக்குப்பதிவு செய்யப்பட்டு 4 வருடங்களுக்கு முதல் இவ்விடயம் யூரிகள் சபைக்கு பாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த யூரிகள் சபை படுகொலை செய்த குற்றவாளிகளை அவர்கள் குற்றவாளிகள் இல்லை என விடுதலை செய்து இச்சம்பவத்திற்கு நீதி மறுக்கப்பட்டிருந்தது. இதனால் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்படுகின்ற இனப்படுகொலைகளுக்கு இலங்கையிலே நீதி கிடைக்காது என்பதற்கு இது ஒரு நிரூபணமான எடுத்துக்காட்டாகும்.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கு நீதி கேட்கின்ற இவ்வேளையிலே 1996 ஆம் ஆண்டு குமரபுரம் பகுதியில் இன அழிப்பு செய்யப்பட்ட மக்களை நாம் நினைவு கூருவதோடு, எமக்கான நீதி சர்வதேசத்திடமிருந்தே கிடைக்க வேண்டும். நாங்கள் உள்நாட்டுக்குள்ளேயே நீதியை எதிர்பார்க்கவில்லை. இலங்கை அரசு ஒருபோதும் தமிழ்மக்களின்இனஅழிப்புக்களுக்குநீதியையும், எதுவித தீர்வையும், தரமாட்டாது, எனவே, நாம் சர்வதேசத்திடமே நீதியைக் கேட்டு நிற்கின்றோம். - என அவர் இதன்போது தெரிவித்தார்.(05)

# காரைதீவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று



(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவில் நேற்று (சனிக்கிழமை) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடத்தப்பட்டது.

இலங்கைதமிழரசுக்கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலின் ஏற்பாட்டில் இந் நினைவேந்தல் நிகழ்த்தப்பட்டது.

நிகழ்வில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான க.சிவலிங்கம், பொ.செல்வநாயகம், திருமதி சுமித்ரா, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் த. மோகனதாஸ், ஆலய தர்மகர்த்தா த.சிவகுமார் ,சமூக செயற்பாட்டாளர் வினாயகம் விமலநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உறவுகளை நினைவு கூர்ந்து சுடரேற்றி அகவணக்கம் செய்யப்பட்டது.(05)

# தமிழின அழிப்பின் 15 ஆவது ஆண்டு இலண்டன் மாநகரிலும் அனுஷ்டிப்பு




21 ஆம் நூற்றாண்டின் அதி உச்ச இனவழிப்பாகிய தமிழின அழிப்பின் 15 ஆவது நினைவுநாள் இலண்டன் மாநகரிலும் புலம் பெயர்தமிழர்களால்மிகவும்உணர் வெழுச்சியுடன் நடைபெற்றது.

நேற்று சனிக்கிழமை நாடாளுமன்றச் சதுக்கத்தில் ஒன்றுகூடிய புலம்பெயர் தமிழர்கள் பேரணியாக வெளிவிவகார அமைச்சகத்திற்கு முள்பாகச்சென்று, பிரதமர் வதிவிடத்திற்கு முன்பாகத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது.

"செங்குருதியால் சிவந்த நந்திக் கடலின் விடுதலைத் தாகம் சுமந்து அணிதிரள்வோம்" என்ற தெனிப்பொருளில் பேரணி நடை பெற்றது.

இந்த நிகழ்வை பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும், ஐக்கிய இராட்சியத்தின் தமிழர் இளையோர்அமைப்பும்இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. பெருமள விலானோர் கலந்து பேரணணியில் கலந்து அஞ்சலி செலுத்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது.(05)

# முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தோருக்கு ரவிகரன் நந்திக்கடலில் நேற்று அஞ்சலி





முள்ளிவாய்க்கால்தமிழினப்படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவுநாள் இன்றாகும். அந்தவகையில் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (சனிக்கிழமை) நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

நந்திக்கடலில்மலர்தூவி,சுடரேற்றிஉணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்திய பின்னர் ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் -

எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல். ஏராளமானஎங்கள்உறவுகளின்கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.ஜெகதீசன், சமூகசெயற்பாட்டாளர் அ.பீற்றர் இளஞ் செழியன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# கல்முனை வாடிவீட்டு வீதியில் அஷ்ரபுக்கு கட்டடத் தொகுதி

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனையில் மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப் நினைவாக அஷ்ரப் ஞாபகார்த்த அருங்காட்சியகம்ஒன்றைஅமைப்பது தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி ஊடக பிரிவால் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் சமகால அபிவிருத்தி மற்றும் அரசியல் தொடர்பாகவும் ஊடகங்களுக்கு தெளிவூட்டும் ஊடக சந்திப்பு ஒன்றை 2024.05.18 ஆம் திகதி கல்முனை மாநகரசபை கேட்போர் கூடத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கூட்டியிருந்தார்.

ஜனாதிபதி குறிப்பிட்டுள்ள முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப் ஞாபகார்த்த அருங்காட்சியகம் தொடர்பில் இங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், திட்டமிட்டுள்ள குறித்த கட்டடத்தொகுதி, இலங்கை முஸ்லிம்கள்தொடர்பில்ஆய்வுரீதியானஆவணங்கள் சேகரித்து அடுத்த தலைமுறைக்கு முஸ்லிம்களின் இருப்பைஉறுதிப்படுத்தும்இடமாகவும், முஸ்லிம்கள் எதிர்நோக்கும் எதிர்மறைக் கருத்துக்களை சட்ட ரீதியாகவும் ஒருமித்த கருத்துக்கள் ஊடாகவும் எதிர்கொள்ள தீர்மானங்களை எடுக்கும் இடமாகவும், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை நேரான பாதையில் இட்டுச்சென்று அவர்களில் இருந்து சிறந்த தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் இடமாகவும், மர்ஹூம் தலைவர் அஷ்ரப் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் கருத்துக்களை சேகரித்து வைக்கும் இடமாகவும் குறித்த கட்டடத்தொகுதி அமையும் என்று குறிப்பிட்டார்.

ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டுள்ள மேற்படி கட்டடத்தொகுதிக்கான சரியான பெயரை புத்திஜீவிகளை அணுகி அவர்களின் ஒப்புதலுடன் வைப்போம் என்றும் இந்தக் கட்டடத்தொகுதி கல்முனை வாடி வீட்டு வீதியில் அமையும் என்றும் தெரிவித்தார்.

குறித்த கட்டடத்தொகுதியை ஜனாதிபதியிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு தன்னுடன் இருந்து ஒத்துழைத்த அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக் றஹ்மானுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அமையவுள்ள கட்டடத்தொகுதி சர்வதேச தரத்தில் அமையும் என்றும் தெரிவித்தார்.

முன்னெடுக்கப்பட்டுள்ளஅபிவிருத்திகள்தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், டி100 என்ற 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் கொரோனா மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் விடுபட்டிருந்த அபிவிருத்திப்பணிகள் மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

முஸ்லிம்களின்நலன்மற்றும்இருப்புதொடர்பில் கட்சி கூடி, சரியான தீர்மானங்களை எடுக்கும் என்றும் பிரதேச அபிவிருத்திகள் மற்றும் மக்கள் நல திட்டங்களை கையாள்வது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளானதாங்கள்சம்பந்தப்பட்டவர்களிடம்பேசி நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

கல்முனை தமிழ் மக்களை முன்னிலைப்படுத்தி சிலரால் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஹரீஸ்,

கல்முனை தமிழ் முஸ்லிம் மக்கள் அவர்களது தேவைகள் அடிப்படையில் பிட்டும் தேங்காய் பூ போலவும்இருப்பதாகவும்பிரச்சினைகளைகாரணம் காட்டி அரசியல் செய்ய முனைபவர்களே குறித்த போராட்டத்தின்பின்னணியில்இருக்கின்றனர்எனவும் தெரிவித்தார். தன்னையும் மாற்றுப்போராட்டம் ஒன்றை செய்ய சிலர் கோருவதாகவும் அவ்வாறான குறுகிய எண்ணம் தன்னிடம் இல்லை என்றும் தெரிவித்தார்.

பாரிய பிரதேசங்களை உள்ளடக்கிய கொழும்பு போன்ற மாநகர சபைகளை துண்டாட விரும்பாத சில அரசிய பிரமுகர்கள் கல்முனையை இனரீதியாக பிரிக்க முனைவது ஆச்சரியத்தை தருவதாகவும் தெரிவித்தார்.

உண்மையில் பல்வேறு அலகுகளாக பிரிவே வேண்டும் என இப்பிரதேச மக்கள் விரும்பினால் அதற்கு தான் தடையாக இருக்கப்போவதில்லை என்றும் இதய சுத்தியுடம் பேச்சு ஊடாக அதனையும் செய்யத் தயார் என்றும் சரியான எல்லைகளை வரையறுத்து அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியும் என்றும் நிலத்தொடர்பற்ற எல்லை என்பது சாத்தியப்படாது என்றும் இங்கு கருத்துத் தெரிவித்தார். (05)

# வவுனியா இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சிகளுக்கு அச்சுறுத்தல்

## நீதிமன்றில் தெரிவிப்பு

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபருடன் தொடர்பில் உள்ள பெண் கிராம அலுவலரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சாட்சியாளர் வவுனியா நீதிமன்றத்தின்கவனத்திற்குக்கொண்டுவந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றால் ஊற்றி எரியூட்டப்பட்ட சப்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் மரணமடைந்திருந்தனர். குறித்த இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழுபேர்கைதுசெய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி வழக்கு விசாரணை வவுனியா நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற வீட்டு உரிமையாளரான சுரேஸ் மன்றில் ஆஜராகி சாட்சியமளித்திருந்தார். குறித்த சாட்சியத்தில் தனது வீட்டில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் எரிகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று தற்போது கல்வி கற்று வரும் தனது மகள் இச்சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை அடையாளம் காட்டியிருந்தார்.

இதன் பின் குறித்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபருடன் தொடர்புடைய பெண் கிராம அலுவலர் எனது மகள் கல்வி கற்க செல்கின்ற போது அங்கு நின்று மகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளார். நான் குறித்த இடத்திற்குச் சென்றதும் அவர் அங்கிருந்து சென்றுள்ளார்.

குறித்த பெண் கிராம அலுவலரால் அச்சுறுத்தல் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், குறித்த பெண் கிராம அலுவலர் சம்பவத்தின் போது மரணமடைந்த சுகந்தன் அவர்களுடன் முன்னர் இணைந்து வாழ்ந்து வந்தார் எனவும், அதன் பின் சுகந்தனின் நண்பரும் பிரதான சந்தேக நபருமாகிய தடுப்பில் உள்ள நபர் குறித்த கிராம அலுவலரை காதலித்து தான் அழைத்து சென்று வாழ்ந்து வந்தார் எனவும் தெரிவித்ததுடன், அதனால் ஏற்பட்ட முரண்பாடு இக் கொலைக்கு காரணம் என சாட்சியமளித்திருந்ததாகத் தெரிவித்தார்.

இவ்வழக்குஅடுத்ததவணைக்காகஜூன்மாதம்7 இற்குமன்றினால்திகதியிடப்பட்டுள்ளது. இதேவேளை, இச்சம்பவத்துடன்தொடர்புடையவர்கள்எனசந்தேகிக் கப்படும் மூவர் தலைமறைவாகியுள்ளதுடன், அவர்களுக்கு பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(05)

# புதுக்குடியிருப்பில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை: ஒருவர் கைது



புதுக்குடியிருப்புதேவிபுரம்பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன், சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஒருவரை கைது செய்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில்இடம்பெற்றகைதுசம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பெரியபிகுளம் பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்றுவருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய கொஸ்தாபிள் பிரதீபனுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்ட

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையில் பொலிஸ் சார்ஜன்களான ஜெயசிங்க , குணவர்த்தன, பொலிஸ் கொஸ்தாபல்களான ஜெயசூரிய, பணாவர, பிரதீபன், விஜரத்ன, பெண் கொஸ்தாபலான வினோதமலர் ஆகிய குறித்த பொலிஸ் குழுவினர் கைது நடவடிக் கையை மேற்கொண்டி ருந்தனர்.

கோடா 1702 லீற்றர் , எரிந்த கோடா 30 லீற்றர், கசிப்பு 58 லீற்றர், பரல் 18, கசிப்பு உற்பத்தியாக்குவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங் களுடனும் தேவிபுரம் அ பகுதியினை சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரிடம் மேற்கொள்ளப் பட்டுவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும்பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (05)

# கல்முனை கிறீன்பீல்ட் வீட்டுத் திட்ட பள்ளிவாசல் நேற்று திறந்துவைப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கிறீன்பீல்ட் வீட்டுத் திட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முகையதீன் பள்ளிவாசல் திறப்பு விழா நேற்று (சனிக்கிழமை) பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் ஏ.எல்.நபீர் ஒருங்கிணைப்பில்கல்முனைமுகைதீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் டொக்டர் எஸ்.எம்.ஏ. அஸீஸ் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றது.





றஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.எம்.மன்சூர் அவர்களுடைய புதல்வர் றஹ்மத் மன்சூர் அவர்களுடைய முயற்சியால் வை.டப்ளியு.எம்.ஏஅமைப்பின்நிதி அனுசரணையோடுபுனரமைப்பு செய்யப்பட்ட இப்பள்ளிவாசலை இலங்கைக்கான மலேசிய உயர்ஸ் தானிகர் எச்.இ. பெட்லி ஹிஸாம் ஆதம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வை.டப்ளியு.எம்.ஏ அமைப்பின் தலைவி பவாஸா தாஹா, பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி றம்ஸீன் பக்கீர், மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் கலாநிதி எம்.என்.எம்.அஸீம், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப் பினர் நிஸார் ஜெ.பி, முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் சகோதரி சல்மா ஹம்சா, மலேசியா உயர்ஸ்தானிக ரின் பாரியார் உட்பட பள்ளிவாசல் நிர்வாகசபைஉறுப்பினர்கள், மைமூனா மதரஸா நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன் போது கலந்து கொண்ட அதிதிகளுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் நிகழ்வின் இறுதியில்விசேடதுஆபிரார்த்தனையும் இங்கு இடம்பெற்றது.(05)

# தெஹிவளையில் விபத்து இளைஞர் ஒருவர் கைது

கொழும்பிலிருந்து தெஹிவளை நோக்கி பயணித்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் எதிர்புறத்தில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு ஓட்டோக்கள் மற்றும் கார் மற்றும் கெப் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது .

தெஹிவளை பகுதியில் வெள்ளிக் கிழமை இரவு இந்த வாகன விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர் .

விபத்தை ஏற்படுத்திய இளைஞனை தெஹிவளை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## பள்ளமடுவில் சுகவீனமுற்ற நிலையில் யானை மீட்பு

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளமடு வயல் பகுதியில் சுகவீனமுற்ற நிலையில் சுமார் 2 வயது மதிக்கத்தக்க யானை ஒன்று வெள்ளிக்கிழமை காலை உயிருடன் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யானை ஒன்று சுகவீனமுற்ற நிலையில் காணப்பட்டதை அப்பகுதி மக்கள் அவதானித்த நிலையில் உடனடியாக வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்தநிலையில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மிருக வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து சுகவீனமுற்று காணப்பட்ட யானையை பார்வையிட்டு யானைக்கு உரிய சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

## ஊர்காவற்துறை பகுதியில் கண்ணிவெடிகள் மீட்பு



ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றிலிருந்து மூன்று கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்தகாணியின் உரிமையாளர் காணியை சுத்தம் செய்யும் போது குறித்த கண்ணிவெடிகள் இருப்பது அவதானிக்கப்பட்டது. இந்நிலையில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

நீதிமன்றத்தில் அனுமதி பின்னர் குறித்த கண்ணிவெடிகள் மீட்கப்படவுள்ளன.(05)

## யாழ். உடுவிலில் மரத்திலிருந்து தவறி விழுந்து இளைஞன் சாவு

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் மரத்திலிருந்து தவறிவிழுந்த இளைஞன் ஒருவர் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இதில் ஆலடி உடுவில் மானிப்பாயைச் சேர்ந்த சசிக்குமார் ரூபின்சன் என்ற 20 வயது இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் கடந்த 12ஆம் திகதி மாங்கனிகளை பறிப்பதற்காக மாமரமொன்றில் ஏறிய நிலையில் தவறிவிழுந்ததில் சுயநினைவை இழந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரணவிசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)



JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 706563213 / 703563213

## JRIDE TAXI APP
## SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.05.2024இல் வெளியிடப்பெற்றது